பிந்திய செய்திகள்:- விபரங்கள் பக்கம் 25, 26 பார்க்க

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com
www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 31, 15 நவம்பர் 2024 இதழ்:- 24

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 23 செப்டம்பர் 2024 முதல் 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி. தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

## வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு என அனைத்து மக்களின் மகத்தான ஆதரவுடன் அநுரவின் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கிறது!



GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife
Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## திருகோணமலையில் 106 வயது தமிழ் முதியவர் வாக்களிப்பு!

பாராளுமன்றத்தேர்தலுக்கான வாக்களிப்பு நடைபெற்றுவரும் நிலையில் 106 வயது முதியவர் யோன் பிலிப் லூயிஸ் தமது வாக்கை திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் உள்ள வாக்குச்சாவடியில் செலுத்தினார். யாழ்ப்பாணத்தில் 18.11.1918 இல் தாம் பிறந்து தமது 22 ஆவது வயதில் திருகோணமலைக்கு வந்து தொடர்நது இங்கே வாழ்ந்து வருவதாகவும் இலங்கையின் பாராளுமன்ற தேர்தல்கள் அனைத்திலும் தாம் வாக்களித்துள்ளதாகவும் அவர் கூறினார்.



## தமிழர்களுக்குத் அரசியல் தீர்வை வழங்க அநுர அரசை சிங்கள பௌத்த இனவாதம் அனுமதிக்குமா?

விடுதலை செய்யும் தமிழ் அரசியல் கைதிகளின் பெயரை ஜனாதிபதி குறிப்பிட்டால் அவர்கள் செய்த பயங்கரவாத செயற்பாட்டை நான் குறிப்பிடுவேன். பிரபாகரனின் நோக்கத்தை புதிய அரசியலமைப்பால் நிறை வேற்ற இடமளிக்க முடியாது. (4ம் பக்கம் பார்க்க)

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



21 Years Real Estate Experience

**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com



HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

**Simcoe St N. & Conlin Rd**


Oshawa $279,000
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!


**Sheppard Ave & Allen Rd**


Toronto $619,000
2+1 Beds • 2 Baths • 4+1 Rooms
Close To Subway, Ttc, York University

**Neilson/Tapscott**

Scarborough $445,000
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC


**Kennedy Rd / Hwy 401**

Scarborough $699,000
2+1 Beds • 2 Bath • 6 Rooms
Freshly painted & renovated!


**Sheppard & Neilson**

Malvern $699,900
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!

**Simcoe St N/ Brittania Ave**

Oshawa $770,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Corner lot Just like Semi Townhouse

**McLevin Ave & Morningside**


Malvern $880,000
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement

**Townline Rd & Shankel Rd**

Oshawa $999,900
3 Beds • 4 Baths • 8 Rooms
Close To Highway 401, 418, 407

**Sheppard Ave E / Neilson Rd**

Scarborough $842,000
3 Beds • 3 Baths • 6+2 Rooms
FULLY RENNOVATED

**Church St N & Rossland Rd W**

Ajax $899,999
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout

**Church St N & Rossland Rd W**

Ajax $899,999
3 Beds • 3 Baths • 6 Rooms
Upgraded Hardwood Floors

**Kellough St/ Mcneil St**


Innisfil $1,295,000
4+1 Beds • 5 Baths • 11+3 Rooms
Open concept, large eat-in kitchen

**Ninth Line/Donald Cousens**

Markham $630,000
2 Beds • 2 Baths • 4 Rooms
Minutes to Stouffville Hospital

**Mara & King**

Beaverton $729,800
4 Beds • 3 Baths • 9 Rooms
2300 Square Foot Home

**Finch Ave E/ Morningside Ave**
FOR LEASE

Scarborough $2,500
3+1 Beds • 3 Bath • 10+3 Rooms
Nicely Maintained And Cleaned

**Scarborough Golf/Lawrence Ave**
FOR LEASE

Scarborough $1,900
2 Beds • 1 Bath • 4 Rooms
Lovely Corner Bungalow

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு என அனைத்து மக்களின் மகத்தான ஆதரவுடன் அநுரவின் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கிறது!

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலுக் கான வாக்கு எண்ணிக்கை இப் பத்திரிகை அச்சுக்குப் போகும் வரை (வியாழன் மாலை 6.30 மணி வரை, நடந்து வருகிறது. தபால் வாக்குகள் எண்ணும் பணிகள் மதியம் 4:00 மணியளவில் துவங்கி நடை பெற்று வருகிறது.இதனைத் தொடர்ந்து மாலை 7.00 மணியளவில் நேரடி வாக்குகள் எண்ணும் பணி துவங்கி நடைபெற்று வருகிறது.

சமீபத்தில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று அநுர குமாரதிஸநாயக்க புதிய ஜனாதிபதி யாக பதவியேற்றுள்ள நிலையில், அவர் அங்கும் வகிக்கும் தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற தேர்தலி லும் முன்னிலையில் உள்ளது.

நாடு முழுவதும் 60வீதம் முதல் 65வீதம் வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரி விக்கின்றனர்.

தேர்தல் முடிவுகள் தொகுதி ரீதியில் முதலில் அறிவிக்கப்பட்டு பின்னர் மாவட்ட ரீதியான முடிவுகள் அறி விக்கப்படும். அதனைத் தொடர்ந்து கட்சிகள் மற்றும் சுயேட்சை குழு க்களின் உறுப்பினர்கள் பெற்ற வாக்கு களின் எண்ணிக்கை அறிவிக்கப் படும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

15 நவம்பர் 2024 இன்று வெள்ளி க்கிழமை, மொத்த முடிவுகளும் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்க ப்படுகிறது. எமது eelanaduc.ca என்ற மின்னிதழிலும் eelanaduc முகநூலிலும் உடனுக்குடன் செய்தி கள் தெரிவிக்கப்படும்.

இதேவேளை வடக்கு கிழக்கு தெற்கு மேற்கைஒன்றிணைக்கும் ஆட்சியை அமைப்போம் என ஜனாதிபதி அநுர குமார திஸ்நாயக்கா தெரிவித்துள் ளார்.

இலங்கையின் பத்தாவது பாராளு மன்றத்திற்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தலில், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நேற்றைய தினமும் வியாழக்கிழமை முற்பகல் மருதானை பஞ்சிகாவத்த அபயசிங்காராமவில் தனது வாக்கை அளித்தார். வாக்களித்த பின்பு ஊடக ங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி தேசிய மக்கள் சக்தி வலுவான பாராளுமன்றத்தை அமைக் கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். மக்களுக்கு ஏற்புடையதான சட்டங் களை நிறைவேற்றி, புதிய பாராளு மன்ற கலாசாரத்தை உருவாக்க முடியும் என்றும் ஜனாதிபதி தெரி வித்தார்.

ஜனாதிபதி தேர்தல் வெற்றியின் பின்னர் நாட்டில் காணப்பட்ட ஜனநாயக ரீதியிலான சுதந்திரத்தை இனிவரும் தேர்தல் காலங்களிலும் எதிர் பார்ப்பதாகவும், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மக்கள் அதை உணர்ந்துள்ளனர் என்றும் அத னையே இந்நாட்டின் தேர்தல் கலா சாரமாக மாற்ற எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.



இந்தப் பொதுத் தேர்தல் வாக்களிப் பில் ஒரேயொரு கட்சியைத் தவிர ஏனைய கட்சிகளின் ஆதரவாளர்கள் ஆர்வம் செலுத்தவில்லை என்பது எமது நடமாடும் கண்காணிப்பின் போதுஅவதானிக்கப்பட்டது. ஆனால் இது மிகவும் துரதிர்ஷ்டவசமான தாகும் என்று வீவ் தேர்தல் கண் காணிப்பு அமைப்பின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். ராஜகிரியவில் உள்ள வீவ் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் தலை மையகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட் டில் இதனை தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகை யில் இம்முறை தேர்தலில் மக்கள் ஆர்வம் காண்பித்துள்ள வீதம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. எம் மால் முன்னெடுக்கப்பட்ட நடமாடும் கண்காணிப்பின்போது ஒரேயொரு கட்சியின் ஆதரவாளர்கள் மாத்திரமே ஆர்வத்துடன் வாக்களிப்பதை அவ தானிக்க முடிந்தது.

ஏனைய கட்சி ஆதரவாளர்கள் மத்தி யில் அதனை அவதானிக்க முடிய வில்லை. எவ்வாறிருப்பினும் இது துரதிர்ஷ்டவசமான விடயமாகும். சிலரிடம் நாம் இது குறித்து வின விய போது எவருக்கும் இதில் ஆர்வமில்லை என தெரிவிக்கப்பட் டது. இதனால் குறித்த கட்சிகளும் கவலையடைந்துள்ளமையும் அவ தானிக்கப்பட்டுள்ளது.

225 பேரும் வேண்டாம் என்ற கோஷ த்தை ஏற்றுக் கொள்ள முடியாது. கடந்த முறையும் நான் அதனை எதிர்த்திருந்தேன். ஆனால் எமக்கு தவறானவர் எனத் தோன்றுபவர்களை மீண்டும் தெரிவு செய்யாமல் இருப்ப தற்கான அதிகாரம் எமக்கிருக்கிறது. எனவே வாக்களிப்பின் போது வாக்காளர்கள் அது தொடர்பில் சிந்திக்க வேண்டும் என்றார்.

இதுவரை கிடைக்கப் பெற்ற தேர்தல் முடிவுகளின்படி அநுரகுமாரதிஸ நாயக்கா தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பறறுவது உறுதியாகி விட்டது இதேவேளை யாழ்ப்பாணம், நல்லூர் தொகுதிகளிலும் அநுராவின் கட்சி பெரும்பான்மை வாக்குகளைப் பெற் றுள்ளது.

### நல்லூர் தொகுதி

யாழ்.மாவட்டத்தின் நல்லூர் தேர்தல் தொகுதியின் வாக்கு முடிவுகள் வெளி யாகியுள்ளன. இதன்படி தேசிய மக்கள் சக்தி கட்சி 8831 வாக்குகளைப் பெற் றுள்ளது. தமிழ் மக்கள் கூட்டணி 3527 வாக்குகளைப் பெற்றுள்ளது. இலங்கை தமிழரசுக் கட்சி 3228 வாக்குகளைப் பெற்றுள்ளது. சுயேட் சைக் குழு 17 இல் களமிறங்கியவர் கள் 2279 வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ளனர். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 2396 வாக்குகளைப் பெற்றுள்ளது.

### யாழ்ப்பாணத் தொகுதி

யாழ்.மாவட்டத்தின் யாழ்ப்பாண தேர்தல் தொகுதியின் வாக்கு முடிவு கள் வெளியாகியுள்ளன. இதன்படி, தேசிய மக்கள் சக்தி கட்சி 9.066 வாக்குகளைப் பெற்றுள்ளது. இல ங்கை தமிழரசுக் கட்சி 2.582 வாக்கு களைப் பெற்றுள்ளது. அகில இல ங்கை தமிழ் காங்கிரஸ் 1.612 வாக்கு களைப் பெற்றுள்ளது. ஈழ மக்கள் ஜனநாயக கட்சி 1.361 வாக்குகளைப் பெற்றுள்ளது. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி 1.124 வாக்கு களைப் பெற்றுள்ளது.

### ஊர்காவற்றுறைத் தொகுதி

யாழ். மாவட்டத்தின் ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதிக்கான முடிவுகள் வெளியாகியுள்ளன. இதன்படி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் 3296 வாக்குகளை பெற்றுள்ளனர். இல ங்கை தமிழரசுக் கட்சியினர் 2626 வாக்குகளை பெற்றுள்ளனர். தேசிய மக்கள் சக்தி கட்சியினர் 2116 வாக்கு களைப் பெற்றுக் கொண்டுள்ளனர். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 1000 வாக்குகளைப் பெற்றுக் கொண் டுள்ளனர்.

**இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் முழுமையான முடிவுகள் விபரங்களுடன் விசேட இணைப்பை eelanadu.ca என்ற மின்னிதழ் மூலமாக பார்வையிடலாம்**

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# தமிழர்களுக்குத் அரசியல் தீர்வை வழங்க அநுர அரசை சிங்கள பௌத்த இனவாதம் அனுமதிக்குமா?



விடுதலை செய்யும் தமிழ் அரசியல் கைதிகளின் பெயரை ஜனாதிபதி குறிப்பிட்டால் அவர்கள் செய்த பயங்கரவாத செயற்பாட்டை நான் குறிப்பிடுவேன். பிரபாகரனின் நோக்கத்தை புதிய அரசியலமைப்பால் நிறைவேற்ற இடமளிக்க முடியாது. நாட்டின் ஒற்றையாட்சியை கருத்திற் கொண்டு மக்கள் பொதுத்தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் 11 நவ 2024 திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனது கொள்கை பிரகடனத்தில் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக 2015 முதல் 2019 வரை ஆட்சியில் இருந்த நல்லாட்சி அரசாங்கம் தயாரித்த சட்ட வரைவினை அடிப்படையாகக் கொண்டு புதிய அரசியலமைப்பை தயாரிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக நியமிக்கப்பட்ட குழுவில் பதவி வகித்த லால் விஜயநாயக்க ஜனாதிபதித் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரச்சார மேடைகளில் முன்னிலையில் இருந்தார். ஒற்றையாட்சி அரசியலமைப்பினை இரத்துச் செய்து சமஷ்டியாட்சி முறைமையிலான அரசியலமைப்பை உருவாக்கும் பரிந்துரைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை ஒற்றையாட்சி நாடு என்பதால் தான் பௌத்த சாசனம் பாதுகாக்கப்படுகிறது. அனைத்து இன மக்களும் சுதந்திரமாகவும், நிம்மதியாக வாழ்கிறார்கள். சமஷ்டியாட்சி முறைமையிலான அரசியலமைப்பை உருவாக்கினால் 9 மாகாணங்களுக்கு மாறுப்பட்ட சட்டங்கள் இயற்றப்படும் இதனால் நாட்டின் தேவையற்ற முரண்பாடுகள் மாத்திரமே தோற்றம் பெறும்.

நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாப்பதற்காகவே 29 ஆயிரம் இராணுவத்தினர் நாட்டுக்காக உயிர்தியாகம் செய்தனர். அதே போல் 14 ஆயிரம் இராணுவத்தினர் அங்கவீனமானார்கள். பாரிய இழப்பு மற்றும் தியாகத்துக்கு மத்தியில் பாதுகாத்த ஒற்றையாட்சியை ஒரு போதும் விட்டுக் கொடுக்க முடியாது. பிரபாகரனின் சமஷ்டியாட்சி நோக்கத்தை புதிய அரசியலமைப்பின் ஊடாக நிறைவேற்றவும் எம்மால் இடமளிக்க முடியாது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வடக்குக்கு சென்று மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாகவும், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். தமிழ் அரசியல் கைதிகள் என்று சிறையில் எவரும் கிடையாது. விடுதலை செய்யும் அரசியல் கைதிகளின் பெயர் பட்டியலை ஜனாதிபதி குறிப்பிட்டால் அவர்கள் செய்த பயங்கரவாத செயற்பாடுகளை நான் குறிப்பிடுவேன். தமது அரசியல் பிரபல்யத்துக்காக தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்த வேண்டாம் என்று அரசாங்கத்திடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போதைய சுதந்திரம் ஒன்றும் இலகுவாக கிடைத்தொன்றல்ல என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இடம் பெறவுள்ள பொதுத் தேர்தல் தீர்மானமிக்கது. படித்தவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புவதை காட்டிலும் நாட்டு பற்றுள்ளவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும். அதிகாரத்தில் இருந்த போதும், இல்லாத போதும் நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாக்க குரல் கொடுத்துள்ளோம். தேசிய மக்கள் சக்தி நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாக்கும் என்ற நம்பிக்கை கிடையாது.

நாட்டின் ஒற்றையாட்சியை கருத்திற் கொண்டு பொதுத்தேர்தலில் சிறந்த தீர்மானத்தை மக்கள் எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன் என்றார்.

மகாவம்ச சிந்தனை உள்ள இவர் போன்ற இனவெறியர்கள் இருக்கும் வரை ஆயிரம் ஆயிரம் அநுராக்கள் வந்தாலும் இலங்கையில் மாற்றம் எதுவுமே நடைபெறப் போவதில்லை.

தமிழினம் இலங்கைத் தீவில் தப்பிப் பிழைக்க வேண்டுமானால் மீண்டும் ஒரு பிரபாகரனுக்காக காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை.




கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)
Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அனைத்து அம்பாள் அடியார்களிற்கும் வணக்கம்!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி – நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுர விட்டுச் சென்ற செய்தி என்ன?

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க10 நவம்பர் 2024 தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரத்துக்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார். யாழ். நகரில் அவர் உரையாற்றிய பிரசாரக் கூட்டத்தில் வடக்குக்கு வெளியில் இருந்து பல பஸ்களில் கூட்டிவரப்பட்ட மக்களும் கலந்து கொண்டனரெனக் கூறப்படுகிறது.



நாட்டின் ஜனாதிபதி கலந்து கொள்ளும் கூட்டத்தில் சொற்ப எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டால் மதிப்பாக இருக்காது என்பதால் தேசிய மக்கள் சக்தியின் செயல்பாட்டாளர்கள் வெளியில் இருந்து ஆட்களை அழைத்து வந்திருக்கலாம்.

ஜனாதிபதி தேர்தலில் திஸநாயக்கவின் பிரசாரக் கூட்டங்களில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டங்களுக்குக் கூட உணவும் கொடுத்து வெளியிடங்களில் இருந்து மக்கள் பஸ்களில் ஏற்றியிறக்கப்பட்ட பல சந்தர்ப்பங்களும் உண்டு. தேர்தல் அரசியல் என்று வந்து விட்டால் 'இது எல்லாம் சகஜமப்பா...' என்றாகி விட்ட நிலையில் அதுவும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்து விட்டால் கேட்கவா வேண்டும்.

ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு அதுவும் குறிப்பாக தேசிய மக்கள் சக்தியின் தலைமைக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.)வின் அரசியல்வாதிகள் இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் மேலும் குறிப்பாக அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் தொடர்பில் எதிர்மறையான கருத்துகளை அண்மைய நாட்களில் வெளியிட்டு வந்த பின்புலத்தில் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு வந்த திஸநாயக்க அரசியல் தீர்வு குறித்து ஏதாவது கூறுவார் என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது. யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களும் தங்களுக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பதற்கு மனங் கொள்வதற்கு வசதியாக தங்கள் தலைவர் அரசியல் தீர்வு தொடர்பில் சில உறுதிமொழிகளை வழங்கினால் நன்றாக இருக்கும் என்று நிச்சயமாக எதிர்பார்த்திருப்பார்கள். ஆனால், ஜனாதிபதி அதைப் பற்றி எதையும் கூறாமல் இருப்பதில் மிகவும் 'கவனமாக' நடந்து கொண்டதை காணக் கூடியதாக இருந்தது.

2015 — 2019 'நல்லாட்சி' அரசாங்க காலத்தில் தொடங்கப்பட்ட அரசமைப்பு வரைவு செயன்முறைகளை தொடர்ந்து முன்னெடுத்து நிறைவு செய்து அதன் மூலமாக புதிய அரசமைப்பை கொண்டு வந்து தேசிய இனப்பிரச்னை உட்பட நாடு எதிர்நோக்கும் முக்கியமான சகல பிரச்னைகளுக்கும் தீர்வைக் காணப்போவதாக ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் எழுத்தில் வழங்கிய வாக்குறுதியைக் கூட யாழ்ப்பாணத்தில் திருப்பி ஒப்பு விக்கவில்லை.

பதிலாக அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் பாதுகாப்பு தேவைக்காக இராணுவத்தினர் வசமிருக்கும் பொதுமக்களின் காணிகளை விடுவிக்கப் போவதாகவும் மாத்திரம் கூட்டத்தில் இருந்தவர்களுக்கு உறுதியளித்தார். பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அமைத்ததும் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுடன் பேச்சுகளை நடத்தி தமிழர் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு முயற்சி எடுப்போம் என்று ஒரு சாட்டுக்கேனும் கூறுவதற்கு அவர் விரும்பவில்லை.

ஆனால், ஜனாதிபதி திஸநாயக்கவின் அரசாங்கத்தின் ஒரேயோர் அமைச்சரான விஜிதஹேரத் பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றும் என்ற உறுதியான நம்பிக்கை தங்களுக்கு இருப்பதாகவும் தேசிய ஐக்கியத்தை சாதிப்பதற்காக தமிழ், முஸ்லிம் மக்களினால் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொண்டு தேசிய ஐக்கிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து பரிசீலிக்கப் போவதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கூறியிருக்கிறார்.

ஆனால், தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்து எதையும் அவர் கூறவில்லை. தென்னிலங்கையில் தாங்கள் ஏற்படுத்தி வருவதாகக் கூறும் மாற்றத்துக்குள் சிறுபான்மைச் சமூகங்களின் குறிப்பாக தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடியதாக எந்த சிந்தனையையும் உள்ளடக்குவதில் நாட்டம் இருப்பதாக ஜனாதிபதியோ தேசிய மக்கள் சக்தியோ எந்த அறிகுறியையும் இதுவரையில் காண்பிக்கவில்லை.

சிறுபான்மை சமூகங்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிரான நிலைப்பாடுகளைக் கொண்ட தென்னிலங்கை அரசியல் சக்திகளை பகைத்துக் கொள்ளாத வழமையான அணுகுமுறையை கடைப் பிடிப்பதிலேயே 'புதிய அரசியல் கலாசாரம்' பற்றி பேசும் இவர்களும் அக்கறையாக இருக்கிறார்கள். இதுவே யாழ்ப்பாணம் வந்து திஸநாயக்க விட்டுச் சென்ற செய்தி இருக்கலாம்.

# மீண்டும் வெள்ளை மாளிகைக்கு ட்ரம்ப்



நான்கு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியை ஏற்றுக் கொள்ள மறுத்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த05 நவம்பர் 2024 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸை தோற்கடித்து பெருவெற்றி பெற்றிருக்கிறார்.

அடுத்த வருடம் ஜனவரி 20ஆம் திகதி அவர் தனது 78ஆவது வயதில் அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக பதவியேற்று மீண்டும் வெள்ளை மாளிகைவாசியாகப் போகிறார். மிகவும் முதிர்ந்த வயதில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட இரண்டாவது ஆளாக விளங்கும் ட்ரம்ப் 20 வருடங்களுக்கு பிறகு ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரை விடவும் கூடுதலான மக்கள் வாக்குகளை பெற்ற குடியரசுக் கட்சியின் வேட்பாளர் என்ற பெருமையையும் தனதாக்கிக் கொண்டுள்ளார். முதல் பதவிக் காலத்துக்கு பிறகு தொடர்ச்சியாக அடுத்த பதவிக் காலத்துக்கு ஜனாதிபதியாக இல்லாமல் நான்கு வருட இடைவெளிக்கு பிறகு ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கிறார்.

அமெரிக்க அரசியல் வரலாற்றில் 132 வருடங்களுக்கு பிறகு இவ்வாறு நடைபெற்றிருக்கிறது. அமெரிக்க காங்கிரஸால் இரு தடவைகள் அரசியல் குற்றச்சாட்டுக்கு ((Impeachment) உள்ளாக்கப்பட்ட பிறகு இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் முதல் நபரும் ட்ரம்ப் தான்.

தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளரை தனிப்பட்ட முறையில் ட்ரம்ப் படுமோசமாக அவதூறு செய்தார். பெண்கள் மீதான வெறுப்பை தூண்டிவிடும் பிரசாரங்களை அவர் மேற்கொண்டார். அமெரிக்காவில் வாழும் சிறுபானமை சமூகங்களுக்கும் குடியேற்றவாசிகள் சமூகங்களுக்கும் எதிராக இன, நிறவெறிப் பிரசாரங்களை தீவிரமாக மேற்கொண்டார்.

கடந்த தடவை ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை ஏற்றுக் கொள்ள மறுத்த அவர், தன்னை தோற்கடித்த ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த தற்போதைய ஜனாதிபதி பதவியேற்பதற்கு முன்னதாக வாஷிங்டனில் அமெரிக்க காங்கிரஸ் கட்டடத் தொகுதிக்குள் தனது ஆதரவாளர்களை ஏவிவிட்டு கலகம் விளைவித்தவர் என்ற அவப்பெயரும் ட்ரம்புக்கு உண்டு. படுமோசமான குற்றச்செயல்கள் தொடர்பில் அவருக்கு எதிராக பல்வேறு வழக்குகள் விசாரணையில் இருந்த நிலையிலேயே அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டார். ட்ரம்பிடம் காணப்படும் இவ்வளவு எதிர்மறையான குணாதிசயங்களில் நடத்தைகளில் எந்த ஒன்றுமே அவரை மீண்டும் தங்களின் ஜனாதிபதியாக தெரிவுசெய்யக்கூடாது என்று பெரும்பான்மையான அமெரிக்கர்களை தடுக்கவில்லை என்பதே முக்கியமாகக் கவனிக்க வேண்டியதாகும்.

கமலா ஹாரிஸ் வெற்றி பெற்றிருந்தால் அமெரிக்க ஜனாதிபதியாகும் முதல் பெண் என்ற பெருமையை மாத்திரமல்ல முதலாவது இந்திய அமெரிக்க கறுப்பின பெண்மணியாகவும் வரலாற்றில் இடம் பெற்றிருப்பார். அதற்கான வாய்ப்பு அவரிடம் இருந்து நழுவி விட்டது. பைடன் போட்டியில் இருந்து இடைநடுவில் விலகி கமலாவை ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக்கியமை நிறவெறியை வெள்ளையர்கள் மத்தியில் உச்சபட்சத்துக்கு தூண்டி விடுவதற்கு வாய்ப்பாகப் போய் விட்டது.

# பிள்ளையானை விசாரணைக்கு அழைத்தது குற்றப்புலனாய்வுத் திணைக்களம்



பிரித்தானிய தொலைக்காட்சியான செனல் 4 தொலைக்காட்சியினால்,இலங்கையரான ஆசாத் மௌலானா என்ற மொஹமட் மிஹிலால் மொஹமட் ஹப்சீருடன் நேர்காணல் ஒன்றை நடத்தியது. இந்த நேர்காணல் , 2023 செப்டம்பர் 6 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாள் ஒன்றில் ஒளிபரப்பப்பட்டது.

இதன்படி, குறித்த காணொளியில் இடம் பெற்றுள்ள ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சர்ச்சைக்குரிய விடயங்கள், குற்றவியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சதி உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்த விசாரணை தொடர்பில், குற்றப்புலனாய்வு திணைக்களம் 11 நவம்பர் 2024 கோட்டை நீதவான் நீதிமன்றில் உண்மைகளை அறிக்கை செய்தது.

இதேவேளை ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடர்பில் சிவனேஷ்துரை சந்திரகாந்தன் என்ற பிள்ளையான் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க பிள்ளையான் என அழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் கடந்த 12 நவ 2024 செவ்வாய்க்கிழமை ஆஜராகுமாறு பிள்ளையானுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தன்னால் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அன்றைய தினம் வர முடியாது எனவும், அதற்கு மாறாக எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் ஒரு திகதியை ஒதுக்கினால் தன்னால் வர முடியும் எனவும் பிள்ளையான் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் நிலங்கள் விடுவிப்பு - அரசியல் கைதிகள் விடுதலை புலம்பெயர் தமிழருக்கும் அழைப்பு விடுத்து அநுர உரை!

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிய பலரும் வெளிநாட்டில் வியாபாரிகளாக கல்விமான்களாக ,ஆராய்ச்சியாளர்களாக உள்ளனர். யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்ப நீங்கள் யோசிப்பீர்கள் தானே உங்கள் அறிவை எடுத்துக் கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வாருங்கள். உங்கள் நிதியை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வாருங்கள். இந்த நேரத்தில் கொண்டு வராத நிதி மற்றும் அறிவால் பலனில்லை . எங்களுக்கும் எங்கள் கட்சிக்கும் ஒரே எதிர்பார்ப்பு இருக்கிறது. அது இந்த நாட்டை கட்டியெழுப்புவது தான் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண பிரதான தேர்தல் பிரசார கூட்டம் பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்திற்கு முன்பாக 10 நவ 2024 மாலை கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது உரையாற்றிய போதே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இதனை தெரிவித்தார். தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் இராணுவத்தினரின் வசம் உள்ள நிலங்கள் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி அனுர குமாரதிசநாயக்க யாழ்ப்பாணத்தில் உறுதியளித்துள்ளார்.

வடபகுதி தமிழர்கள் உண்மையான சுதந்திரத்தை அனுபவிப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

பல வருடங்களாக மூடப்பட்டிருந்த வீதி சமீபத்தில் திறக்கப்பட்டுள்ளது, தனியார் நிலங்கள் கட்டம் கட்டம் விடுவிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தலுக்கு பின்னர் மிகப்பெரிய எழுச்சி யாழ்ப் பாணத்தில் இருந்தது. கடந்த ஜனாதிபதித்



தேர்தலில் ஏனையவர் களில் இருவர் வெல்வார்கள் என்றே வடக்கில் சொல்லப்பட்டது. ஊடகங்களும் அதைத் தான் சொன்னது. நாம் வெல்வோம் என்ற செய்தி வடக்கில் சரியாக செல்லவில்லை. தேர்தலுக்கு பின்னர் எமது காரியாலயம் நிரம்பி வழியத் தொடங்கியது. இதன் பலன் இன்று ஆயிரக்கணக்கான மக்கள் கூடியுள்ளனர். நாடாளுமன்ற தேர்தல் பிரசாரத்திற்காக தற்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணம் வந்தாரா? முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா யாழ்ப்பாணம் வந்தாரா? நாம் வந்தோம். தேர்தலை வெற்றி கொள்ள மட்டும் எமக்கு யாழ்ப்பாணம் தேவை இல்லை. யுத்தம் இல்லாத நாட்டை உருவாக்கவும் இந்த நாட்டை கட்டியெழுப்பவும் யாழ்ப்பாணம் தேவை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 27000



வாக்குகள் கிடைத்து. ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது அது மிகவும் சிறியது. ஆனாலும் அது எமக்கு மிகப்பெரியது.எமது செய்தி தமிழ் மக்களிடம் செல்லவில்லை. தெற்கில் நாம் வேலை செய்தளவுக்கு வடக்கில் வேலை செய்யவில்லை.

ஜனாதிபதி தேர்தலில் வடக்கில் உள்ள கட்சிகளின் தயவுடன் ஏனைய கட்சிகள் வடக்குக்கு வந்தன. அவர்கள் அரசியல் கட்சிகளின் தலைவர்களையே ஒன்றிணைத்தார்கள். மக்களை ஒன்றிணைக்கவில்லை. தேசிய மக்கள் சக்தியில் நாங்கள் வடக்கில் தலைவர்களுடன் பேசியதுடன் மக்களுடன் இணைந்து அரசியல் செய்கிறோம்.

தெற்கிற்கு எதிராக வடக்கிலும் வடக்கிற்கு எதிராக தெற்கிலும் செயற்பட்டு எவ்வாறு ஒற்றுமையை காட்டுவது. நாம் ஒரு அரசியல் கட்சியின் கீழ் ஒன்றிணைய தயார் என்பதை இந்த கூட்டம் காட்டுகிறது.

நான் சொல்லும் விடயங்கள் உங்களுக்கு தேவை இல்லையா? தேவை தானே! பழைய அரசியலை கைவிடுவோம். புதிய அரசியலுக்கு வருவோம். சிங்கள, தமிழ், முஸ்லிம் பேதமின்றி பிரியாது சண்டை பிடிக்காது வாழ்வோம். அது தோல்வியடைந்த பழைய அரசியல். நவம்பர் 14ம் திகதி நாம் பங்களித்து சக்தி வாய்ந்தத அரசாங்கத்தை முன்கொண்டு செல்வோம் என மேலும் தெரிவித்தார்.

இதேவேளை புதிய அரசாங்கம் சோசலிசம் சமத்துவம் என்ற கொள்கையை முன்னிறுத்தி ஆட்சியை முன்னெடுக்கிறது. இது சிங்கள மக்களுக்கு பொருத்தமாக இருக்கும் தமிழ் மக்களுக்கு பொருத்தமில்லாத ஒன்று. எமக்கு நீண்டகால பிரச்சனை உள்ளது. சுயநிர்ணய உரிமைக்காக தொடர்ச்சியாக எமது மக்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த பிரச்சனையை தீர்ப்பதற்கு நடைமுறைக்கு சாத்தியமான ஒரு விடயத்தை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என சிவசக்தி ஆனந்தன் கருத்துத் தெரிவித்துள்ளார்.


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# நாடாளுமன்றத் தேர்தல் களம்:- உத்தமர்களாகக் கட்டியெழுப்பப்படும் வேட்பாளர்கள்

சுமந்திரன் ஒரு பிரச்சாரக் காணொளியில் கூறுகிறார், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணியை தானும் சாணக்கியனும் தான் வெற்றி பெற வைத்ததாக அதற்கு சிவாஜிலிங்கத்தின் அறிக்கை ஒன்றை ஆதாரமாக காட்டுகிறார். ஏனையவர்கள் அந்த பேரணிக்குள் பின்னர் வந்து ஒட்டிக் கொண்டதாகவும் அவர் கூறுகிறார்.

சுமந்திரனின் பிரச்சார காணொளிகளைக் கேட்கும் எவருக்கும் அவரை விட உத்தமர் இல்லை என்ற ஒரு தோற்றம் தான் கிடைக்கும். அவர் எவ்வளவு காணிகளை விடுவித்தார்? எவ்வளவு கைதிகளை விடுவித்தார்? எந்தெந்த ராஜதந்திரிகளை சந்தித்தார்? எப்படியெல்லாம் தமிழ் மக்களுக்காக உழைத்தார்? அதை எப்படி அவருடைய எதிரிகள் வேறுவிதமாக வியாக்கியானம் செய்தார்கள்? என்றெல்லாம் அந்த காணொளிகள் கூறுகின்றன. பிரச்சார காணொளிகளுக்கூடாக யாருக்கு வாக்களிப்பது என்று தீர்மானிக்கும் ஒரு தமிழ் வாக்காளர் சுமந்திரன் ஒரு நீதியான, சுத்தமான அரசியல்வாதி என்ற முடிவுக்குத் தான் வருவார். தமிழ் மக்களுக்கு இவ்வளவு நன்மைகளைச் செய்த ஒருவர், தமிழ் மக்களுக்காக இப்படியெல்லாம் கஷ்டப்பட்டு உழைத்த ஒருவர், அரங்கில் உள்ள அரசியல்வாதிகள் அநேகமானவர்களை விட புத்திசாலியான, சட்டப் புலமை மிக்க ஒருவர், அவர் தான் என்ற முடிவுக்கு வருவார்கள். ஏனென்றால் அந்த காணொளிகள் அப்படித்தான் அவரை கதாநாயகனாக, உத்தமராகக் கட்டமைக்கின்றன.

அப்படித் தான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரச்சாரக் காணொளிகளை தொகுத்துப் பார்த்தால் அங்கேயும் அந்த கட்சியை விட வேறு யாரும் தியாகம் செய்ததில்லை என்ற ஒரு தோற்றம் கிடைக்கும். கடந்த 15 ஆண்டுகளில் அதிகமாக தியாகம் செய்த ஒரு கட்சி அதுதான் என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கும். அதிகமாக போராடிய ஒரு கட்சி, துணிந்து போலிசாரோடும் புலனாய்வுத் துறையோடும் மோதிய ஒரு கட்சி, வீரமான கட்சி அதுதான் என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கும். ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அநேகமாக கோழைகள், போராடாதவர்கள், ஒத்தோடிகள், துரோகிகள், காட்டிக் கொடுப்பவர்கள், இந்தியாவின் ஏஜென்ட்கள் என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கும். ஆயுதப் போராட்டத்தின் ஒரே ஏகபோக வாரிசு அந்தக் கட்சி தான் என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கும். எனைய எந்த ஒரு கட்சிக்கும் அவ்வாறு உரிமை கோரத் தகுதி இல்லை என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கும்.

குத்துவிளக்கு கூட்டணி அதாவது சங்கு கூட்டணி ஜனாதிபதித் தேர்தலில் சங்கு பெற்ற வெற்றிகளின் தொடர்ச்சியாக தன்னைக் கட்டமைக்க முற்படுகின்றது. சங்குச் சினத்தை ஜனாதிபதித் தேர்தலில் முன்நிறுத்திய பொதுக் கட்டமைப்பும் இப்பொழுது சங்கை முன்னிறுத்தும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒன்று தான் என்ற மயக்கத்தை சராசரி வாக்காளர்கள் மத்தியில் ஏற்படுத்துவதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலில் சங்குக்கு கிடைத்த வெற்றிகளை தமக்கும்




மடை மாற்றலாம் என்று அந்தக் கூட்டணி நம்புவதாகத் தெரிகிறது. அந்தக் கூட்டணிக்குள் போட்டியிடும் சசிகலா தன்னை, கொல்லப்பட்ட கணவனின் வாரிசாக முன்வைக்கின்றார்.

சங்குச் சின்னத்தின் கீழ் மற்றொரு பெண் வன்னியில் போட்டியிடுகிறார். முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தவராகிய அவர் போரில் ஒரு காலை இழந்தவர். புனர்வாழ்வு பெற்ற போராளிகள் பலர் அவருக்காக கடுமையாக உழைக்கின்றார்கள். ஆயுதப் போராட்டத்தின் வாரிசாக அவர் தன்னை கட்டமைக்கின்றார்.

தமிழரசுக் கட்சி, முன்னணி, சங்கு கூட்டணி ஆகிய மூன்று கட்சிகளையும் தவிர்த்து ஏனைய கட்சிகளின் பிரச்சாரக் காணொளிகளைப் பார்த்தால் அங்கேயும் அப்படித் தான் உருப்பெருக்கப்பட்ட கதாநாயகத்தனமான தோற்றங்கள் கிடைக்கும்.

மணிவண்ணன் நவீன தேசியம் என்ற ஒரு வார்த்தையை பயன்படுத்துகின்றார். அவருடைய அணி அவரைக் குறித்து கட்டியெழுப்பும் சித்திரமும் பிரம்மாண்டமானது.

கட்சிகளைத் தவிர்த்து சுயேச்சைகளைப் பார்த்தால், அங்கேயும் பிரச்சாரக் களம் அப்படித் தான். மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த தவராசா பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட எத்தனை பேரை தான் விடுதலை செய்திருக்கிறார் என்று பட்டியலிடுகிறார். அவருடைய சுயேச்சை குழுவை சேர்ந்த சரவணபவன் ஐங்கரநேசன் போன்றவர்களும் தாங்கள் தமிழ்த் தேசியத்துக்கு இதுவரை செய்த பங்களிப்பை பட்டியலிடுகிறார்கள்.

மற்றொரு சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த அர்ஜுனா தன்னை எல்லாருக்கும் தெரிந்திருக்கிறது என்று நம்புகிறார். சாவகச்சேரியில் தான் தொடக்கிய கலகம் தன்னை அந்தளவுக்கு பிரபல்யப்படுத்தியிருக்கிறது என்றும் நம்புகிறார். அண்மை நாட்களாக அவர் தன் வாயாலே கெடுகிறார். யூடியூபர்கள் மற்றும் சமூக வலைத்தளங்களால் ஊதிப்பெருக்கப்பட்ட ஒரு பலூன் அவர். அவருடைய சின்னம் ஊசி. அந்த ஊசியே அந்த பலூனை உடைக்கும் ஒரு நிலை.

தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு வெளியே அங்கஜன் பிள்ளையான் போன்றவர்களும் பிரச்சாரக் காணொளிகளை வெளியிடுகிறார்கள். பிள்ளையான் தன்னை கிழக்கின் மீட்பராகக் காட்டுகிறார். அவரை பிரச்சாரப்படுத்தும் காணொளிகள் எல்லாவற்றிலும் அவர் கிழக்கிற்கு செய்த நன்மைகள் பட்டியலிடப்படுகின்றன. வடக்கில் அங்கஜன் ஒப்பீட்டளவில் எல்லாரையும் விட அதிகமாக செலவழிப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அவருடைய பிரச்சார காணொளிகளும் அவரை கதா நாயகராகக் கட்டமைப்பவை. வன்னியில் எமில் காந்தனின் சுயேச்சை குழு போட்டியிடுகிறது. அங்கேயும் காசு தாராளமாக அள்ளி வீசப்படுவதாக ஓர் அவதானிப்பு உண்டு.

இவ்வாறாக தமிழர் தாயகத்தில் கட்சிகளும் சுயேச்சைகளும் பிரச்சார காணொளிகளை அதிகமாக வெளியிடுகின்றன.எல்லாப் பிரச்சார காணொளிகளும் வேட்பாளர்களை சினிமாத் தனமாக கதாநாயக பிம்பங்களாக கட்டியெழுப்ப முயற்சிக்கின்றன.

ஆனால் இம்முறை நாடாளுமன்ற தேர்தல் களத்தில் கட்சிகளோ சுயேச்சை குழுக்களோ பெருங் கூட்டங்களை ஒழுங்குபடுத்தவில்லை. டிஜிட்டல் புரோமோஷன் மட்டும் தமக்குப் போதும் என்று அவர்கள் நம்புகிறார்களா?

சமூக வலைத்தளங்கள் மற்றும் யூடியுபர்களின் காலத்தில் டிஜிட்டல் புரோமோஷனுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. அனுர ஜனாதிபதி தேர்தலின் போது அதிகம் டிஜிட்டல் புரமோஷனில் ஆர்வம் காட்டினார். குறிப்பாக தமிழ் வாக்காளர்களை கவரும் நோக்கத்தோடு தேசிய மக்கள் சக்தி உருவாக்கிய காணொளிகளில் அனுர ஒரு கதாநாயகனாகக் கட்டமைக்கப்பட்டார். பிரபல சினிமாப் பாடல்களை பின்னணியில் ஒலிக்க, அனுர வாகனத்தை விட்டு இறங்குவது, நடப்பது, கையசைப்பது, குழந்தைகளை பெண்களை நெருங்கி வந்து கதைப்பது போன்ற எல்லாவற்றிலும் அவரை ஒரு கதாநாயகனாக கட்டமைக்கும் விதத்தில் அந்த காணொளிகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

அனுரவின் உடல் மொழி, உடல் அசைவுகள் அந்தப் பாடல்களுக்கும் இசைக்கும் பொருத்தமாக இருக்கின்றன என்பதனை இங்கு ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனால் நாடாளுமன்ற தேர்தலில் சில தமிழ்க் கட்சி அரசியல்வாதிகள் வெளியிடும் காணொளிகளில், பின்னணியில் ஒலிக்கும் பாடல் வரிகளுக்கும் இசையின் எழுச்சிக்கும் தோதாக அவர்களுடைய உடல் மொழி காணப்படவில்லை.

யாழ் தேர்தல் தொகுதியில் தமிழரசுக் கட்சிக்குள் வேட்பாளராக நிற்கும் ஒரு பெண் முன்பு பொங்கு தமிழில் ஈடுபட்டவர். தன்னை பொங்குதமிழின் வாரிசாகவும் அவர் முன்னிறுத்துகிறார். அவருக்குரிய பிரச்சார காணொளிகளில் அவர் தனக்கென்று பாடல்களைத் தயாரித்திருப்பதாகத் தெரிகிறது.

மேற்கண்ட பிரச்சாரக் காணொளிகள் பெரும்பாலானவை அந்தந்த கட்சி அல்லது அந்தந்த சுயேட்சைகள் காசு கொடுத்து உரு

(16ம் பக்கம் பார்க்க)

# தேசிய மக்கள் சக்தியும் பாராளுமன்றத் தேர்தலும்

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அடுத்த வாரத்தைய பாராளுமன்றத் தேர்தலில் கைப்பற்றக் கூடிய ஆசனங்களின் எண்ணக்கை தொடர்பில் பல்வேறு கணிப்பீடுகளை அரசியல்வாதிகளும் அவதானிகளும் வெளியிடுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்களித்த பாங்கை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீட்டைச் செய்பவர்கள் தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மை (113 ஆசனங்கள்) கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்று கூறுகிறார்கள்.

அந்தத் தேர்தலில் திஸநாயக்கவுக்குக் கிடைத்த 56 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மை சமூகங்கள் அளித்த வாக்குகளும் அடங்குகின்றன. அதே வாக்குகள் பாராளுமன்றத் தேர்தலில் இரு மாகாணங்களிலும் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களுக்குக் கிடைக்குமா அல்லது ஜனாதிபதியாக திஸ நாயக்க பதவிக்கு வந்த பின்னர் சிறுபான்மை சமூகங்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படும் மனமாற்றம் காரணமாக மேலும் கூடுதல் வாக்குகள் கிடைக்குமா என்பது ஒரு முக்கியமான கேள்வி.

திஸநாயக்கவின் ஒன்றரை மாதகால ஆட்சியில் குறைபாடுகளை கண்டுபிடித்து விமர்சனங்களைச் செய்யும் எதிரணிக் கட்சிகள் நாடு எதிர்நோக்குகின்ற சவால்களை செயல்திறனுடன் கையாண்டு நீண்ட நாட்களுக்கு ஆட்சிசெய்யக்கூடிய ஆற்றலும் அனுபவமும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களுக்குக் கிடையாது என்ற எதிர்மறையான செய்தியையே பாராளுமன்றத் தேர்தல் பிரசாரங்களில் மக்கள் முன்கொண்டு செல்கின்றன.

அது விடயத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் வெள்வேறு முகாம்களில் இருந்தாலும் ஒற்றுமையாகவே நடந்துகொள்கிறார்கள். ஜனாதிபதித் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்திக்கு மக்களிடம் இருந்த ஆதரவில் ஒரு குறைவுக்கான அறிகுறி தெரிவது போன்ற ஓர் எண்ணத்தையும் உருவாக்க அந்த இரு தலைவர்களும் முயற்சிக்கிறார்கள். ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சியையே அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலிலும் ஆதரித்து ஆட்சிக்குக் கொண்டுவரும் வழக்கத்தில் இருந்து இந்தத் தடவை மக்கள் விலகுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

ஜனாதிபதி திஸநாயக்க தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு வசதியாக அவரின் கட்சி அரசாங்கத்தை அமைக்கக் கூடியதாக பெரும்பான்மையான மக்கள் ஆதரவளிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

ஆனால், புதிய அரசமைப்பை கொண்டு வரப்போவதாக ஜனாதிபதித் தேர்தலில் வாக்குறுதி அளித்த தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் தங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை தருமாறு தற்போதைய தேர்தல் பிரசாரங்களில் மக்களிடம் ஆணை கேட்பதை பெரும்பாலும் தவிர்க்கிறது. தங்களுக்கு ஆறில் ஐந்து பெரும்பான்மையோ மூன்றில் இரண்டு பெரும்பான்மையோ தேவையில்லை. சட்டங்களையும் பட்ஜெட்களையும் நிறைவேற்றுவதற்கு உறுதியான ஒரு பெரும்பான்மை பலம் கிடைத்தால் போதும் என்று அதன் தலைவர்கள் கூறுகிறார்கள்.

அதேவேளை, ஜனதாவி முக்தி பெரமுன (ஜே. வி. பி.)வின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தேசிய மக்கள் சக்தி தேசிய அரசாங்கத்தையோ அல்லது கூட்டரசாங்கத்தையோ அமைக்கப் போவதில்லை என்று கூறுகிறார்.

பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்திக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமல் போகும் பட்சத்தில் இந்த நிலைப்பாட்டில் எவ்வாறு அவர்களால் உறுதியாக நிற்க முடியும்? மறுபுறத்தில் ஜனாதிபதியும் அமைச்சர் விஜித ஹேரத்தும் பாராளுமன்றத்தை தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களால் நிரப்புமாறும் எதிர்க் கட்சியே தேவையில்லை என்றும் கூறினார்கள். அவர்கள் மத்தியில் ஏதோ ஒரு குழப்பநிலை தெரிகிறது.

**வாசகர்கள் இச்செய்தியினை வாசிக்கும் போது பொதுத்தேர்தல் முடிவுகள் ஓரளவுக்கு தெரிய வந்து விடும் என்பது குறிப்பிடத் தக்கது.**

# டக்ளஸிற்கு அமைச்சுப் பதவி வழங்க மாட்டோம்! யாழ்ப்பாணத்தில் வெளிப்படையாக அறிவித்த அநுர அரசு!



ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தில் அமைச்சுப் பதவி வழங்கும் எண்ணம் இல்லை என தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று உறுப்பினர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க 08 நவம்பர் 2024 யாழில் தெரிவித்தார். தேவானந்தா மட்டுமல்ல கடந்த காலத்தில் மகிந்த ராஜபக்ச அல்லது ரணில் தலைமையிலான அரசாங்கங்களில் அமைச்சராக பதவி வகித்து நாட்டை அழித்த எவருக்கும் அமைச்சர் பதவி கொடுக்கும் எண்ணம் தமது அரசாங்கத்திற்கு இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்திக்கு வடமாகாண மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

தேவானந்தா ஜனாதிபதியை சந்திக்க அவகாசம் கேட்டார். முன்னாள் அமைச்சர் மற்றும் எம்.பி.யாக இருந்த ஒருவர் ஜனாதிபதியை சந்திப்பதற்கான கோரிக்கைக்கு அனுமதி வழங்குவது அரசியல் தார்மீகமாகும். தேவானந்தா ஜனாதிபதியை சந்தித்த போது ஜனாதிபதியுடன் இணைந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார். அதை எடுத்து பத்திரிகைகளில் வெளியிட்டார். முகநூலில் பதிவிட்டுள்ளார்.

அவருக்கு ஜனாதிபதி உதவி செய்வதாக பெரும் விளம்பரம் செய்தார். தான் மீன்பிடித்துறை அமைச்சராக இருந்த போது அமைச்சுப் பணிகளைப் பற்றி ஜனாதிபதியிடம் பேசியதாக மக்களிடம் பொய் கூறினார். டக்ளஸ் தேவானந்தாவை நினைத்து வெட்கப்படுகிறோம். இப்போது தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியில் இணைவேன் என்று எல்லா இடங்களிலும் கூறி வருகிறார். டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சுப் பதவி வழங்க ஜனாதிபதிக்கோ எமக்கோ அதிகாரம் இல்லை. இந்தப் பொய் முடிவுக்கு வரும் என்று காத்திருந்தோம்.

டக்ளஸும் அவருடைய அடியாட்களும் இன்றும் எல்லா இடங்களிலும் இந்தப் பொய்யைத் தொடர்ந்து சொல்கிறார்கள். ராஜபக்சவுடன் சேர்ந்து நாட்டை அழித்த அமைச்சர்களும் இருக்கிறார்கள். ராஜபக்ச, விக்ரமசிங்க, மைத்திரிபாலவுடன் இணைந்து வடக்கை அழித்தது யார்? தேவானந்தா இலங்கையை அழித்த அமைச்சரவையின் முன்னாள் உறுப்பினர். டக்ளஸ் தேவானந்தா கடந்த தேர்தலில் ரணிலுக்கு உதவினார். ரிஷாத் பதுயுதீனும இவ்வாறான பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றார். அவரிடமிருந்து தமக்கு தொலைபேசி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். அவரும் ராஜபக்ச காலத்தில் அமைச்சராகவும் இருந்தவர்.


நீங்கள் திசைகாட்டிக்கு வாக்களித்தால், மற்றவர்களுக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்? திசைகாட்டி என்பது திசைகாட்டி தவிர வேறில்லை. அமைச்சர்களும் ஒரே திசைகாட்டி உள்ளவர்களாக இருப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சமஷ்டி கட்டமைப்பை உருவாக்க இடமளியோம்! மகிந்த அணியின் மூத்த உறுப்பினர் சரத் தெரிவிப்பு!

ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்கு 29 ஆயிரம் படையினர் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். எனவே, இந்த நாட்டில் சமஷ்டி கட்டமைப்பைக் ஏற்படுத்துவதற்கு ஒரு போதும் இடமளிக்க மாட்டோம். இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த உறுப்பினரான சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது 2015 நல்லாட்சி காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட அரசமைப்புப் பணி இறுதிப்படுத்தப்படும் என்ற உறுதிமொழியை ஜனாதிபதி அநுர வழங்கியுள்ளார். இலங்கை மதச்சார்பற்ற நாடாக இருக்க வேண்டும் எனவும், மாகாண சபைகளுக்குரிய அதிகாரம் பலப்படுத்தப்பட வேண்டும் எனவும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. மாகாண சபையில் நிறைவேற்றப்படும் சட்டங்களை மத்திய அரசு இரத்துச் செய்ய முடியாது. மாகாண இணைப்புக்குரிய அதிகார மும் மாகாண சபைக்குச் செல்லும். எல்லை நிர்ணயம்கூட மாகாண சபை வசம் செல்லும் வகையில் ஏற்பாடுகள் உள்ளன. எனவே, 2015 அரசமைப்பு அமுலுக்கு வந்தால் இலங்கை சமஷ்டி நாடாக மாறும். நாடாளுமன்ற அதிகாரம் குறையும். எனவே, இதற்கு இடமளிக்கக் கூடாது. ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்குப் படையினர் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். எனவே, சமஷ்டி முறைமைக்கு இடமளிக்க மாட்டோம்.

தமிழ் டயஸ்போராக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நாம் தயாரில்லை. ஆட்சியாளர்கள் கள்வர்கள் எனக் கூறியே அநுர தரப்பு ஆட்சிக்கு வந்தது. ஆனால், இன்னும் கள்வர்கள் பிடிபடவில்லை. இதன் மூலம் அவர்கள் கூறியவை பொய்கள் என்பது உண்மையாகியுள்ளன என்றார்.



வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Glve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation
Over 20 Years Experience in the field of Insolvency
Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca



# தமிழர்கள் 13வது திருத்தத்தை இழப்பது அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது!

**– த.கோபாலகிருஷ்ணன் –**




கடந்த நல்லாட்சிக் காலத்தில் 2015 முதல் 2018–2019 வரை முன்னெடுக்கப்பட்டபாராளுமன்றத்தில் பெயர் குறிப்பிட்டு நியமிக்கப்பட்ட வழிகாட்டல் குழுவினால் (Steering Committee) இனப்பிரச்சனைக்கான தீர்வையும் உள்ளடக்கியதாகக் கூறப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையுடன் தடைப்பட்டுப் போன புதிய அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகளைத் தொடர்வதற்குத் தமிழ் மக்கள், 14.11.2024 அன்று நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் கொழும்பு – கம்பஹா – இரத்தினபுரி – கேகாலை – கண்டி – நுவரெலியா – பதுளை மாவட்டங்களில் போட்டியிடும் தமிழ் முற்போக்குக் கூட்டணியையும், யாழ்ப்பாணம் – வன்னி – திருகோணமலை – மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களில் போட்டியிடும் தமிழரசுக் கட்சியையும் வெற்றியீட்டச் செய்ய வேண்டுமென்று தமிழ் மக்கள் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எழுந்தமானமாக நோக்கும் போது ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கா கடந்த நல்லாட்சி அரசாங்கக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட 'புதிய அரசியலமைப்பு' உருவாக்க முயற்சியைத் தொடர்வார் என்ற நம்பிக்கையை மனோ கணேசன் கொண்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

புதிய அரசியலமைப்பு இனப்பிரச்சினைக்கான திருப்தியான தீர்வைத் தரும் என்ற அவரது எதிர்பார்ப்பு வெறுமனே ஓர் எடுகோள் ஆகும். கொழும்பில் வதிகின்ற வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் வாக்குகளைக் குறிவைத்து மனோகணேசன் விடுத்துள்ள ஒரு தேர்தல் தந்திரோபாய அறிவிப்புதான் இது என்றே கொள்ள வேண்டியுள்ளது.

தமிழரசுக் கட்சியும் தமிழர் முற்போக்குக் கூட்டணியும் பரஸ்பரம் தமக்குள் நிறைவேற்றிக் கொள்ளும் தேர்தல் தேவைப்பாடுகள் தான் இந்த வேண்டுகோளின் பின்னணியென்றே கூறவேண்டியுள்ளது.

மனோகணேசன் தனது தேர்தல் தேவைகளுக்காகத் தமிழரசுக் கட்சியின் பெயரையும் சேர்த்துக் கொண்டு புதிய அரசியலமைப்பு மீதான நம்பிக்கையைத் தமிழ் மக்களுக்கு ஊட்ட முனைகிறார். இது உண்மையிலேயே ஆபத்தானது.

ஏனெனில், வரலாற்றில் இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பும் சரி சுதந்திர இலங்கையிலும் சரி அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட வேளைகளிலெல்லாம் அவை சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குச் சாதகமாக இருந்ததே இல்லை.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட டொனமூர் அரசியலமைப்பும் பின்னர் வந்த சோல்பரி அரசியலமைப்பும் சிறு பான்மைத் தமிழர்களுக்கு எந்த நன்மைகளையும் விளைவிக்கவில்லை.

டொனமூர் அரசியலமைப்பு அன்றிருந்த தமிழ் அரசியல் தலைவர்களால் 'Donoughmore means Tamil no more' என வர்ணிக்கப்பட்டது.

சோல்பரி அரசியலமைப்பில் இலங்கையின் சிறுபான்மைத் தமிழர்களுக்கான பாதுகாப்பாக அதன் 29 வது சரத்து விளங்கிய போதிலும், அதனை வைத்துக் கொண்டு தான் மலையகத் தமிழர்களின் வாக்குரிமையையும் குடியுரிமையையும் பறிக்கும் சட்டங்களும் (1948–49) சிங்களத்தை அரசகரும மொழியாக்கும் அரசகரும மொழிச் சட்டமும் (1956) நிறைவேற்றப்பட்டன. நடைமுறையில் இந்த 29 ஆவது சரத்து சிறுபான்மைத் தமிழர்களுக்கு எந்த விதமான பாதுகாப்பையும் வழங்கவில்லையென்பது இச்சட்டங்களின்போது நிதர்சனமாகியது.

சுதந்திர இலங்கையில் இரு தடவைகள் அரசியலமைப்பு மாற்றங்கள் ஏற்பட்டன.

சிறிமாவோ பண்டாரநாயக்க (ஸ்ரீ.ல.சு.க.) தலைமையிலான அரசாங்கம் 1972 இல் புதிய குடியரசு அரசியலமைப்பை நிறைவேற்றியது. அப்போது அதற்குப் பொறுப்பாக அரசியலமைப்பு விவகார அமைச்சராகவிருந்த இடதுசாரி அரசியல் தலைவரான கொல்வின் ஆர் டி சில்வாவே விளங்கினார். அப்போது தமிழர் தம் அரசியல் தரப்பாக விளங்கிய தமிழரசுக் கட்சி அரசியலமைப்பு நிர்ணய சபையில் சமர்ப்பித்த அதி குறைந்த பட்ச கோரிக்கைகளும் உதாசீனம் செய்யப்பட்டன. அவ் அரசியலமைப்பைத் தமிழர்தம் அரசியல் தரப்பு நிராகரித்திருந்தது.

பின்னர் பிரதமர் ஜே ஆர் ஜெயவர்த்தனா தலைமையிலான அரசாங்கம் 1978இல் புதிய 'நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை' அரசியலமைப்பை நிறைவேற்றியது. அப்போதும் கூட தமிழர்களின் கோரிக்கைகள் அனைத்துமே அலட்சியம் செய்யப்பட்டன. அப்போதைய தமிழர்தம் அரசியல் தரப்பான தமிழர் விடுதலைக் கூட்டணி அது நிறைவேற்றப்பட்ட தினத்தன்று அரசியலமைப்பை நிராகரித்துப் பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்திருந்தது.

இந்த வரலாற்றுப் பின்னணியில் பார்க்கும் போது மனோகணேசனால் எதிர்வு கூரப்படும் — நம்பிக்கையூட்டப் பெறும் (தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள) உத்தேச புதிய அரசியலமைப்பு தற்போதுள்ள 13 ஆவது திருத்தத்தைக் காட்டிலும் மேலதிகமான அதிகாரப் பகிர்வை ஒருபோதும் வழங்கப்போவதில்லை.

உத்தேச புதிய அரசியலமைப்பு யோசனையின் பின்னாலுள்ள மறைமுகமான நிகழ்ச்சி நிரல் யாதெனில் தற்போது அரசியலமைப்பின் அங்கமாக விளங்கும் 13 ஆவது திருத்தத்தையும் அதன் விளைவான மாகாண சபை முறைமையையும் நீக்குவதும் அவ்வாறு செய்வதன் மூலம் இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சனையில் இந்தியாவின் தலையீட்டைத் தவிர்ப்பதுமாகும். நீண்ட கால நோக்கில் இது தமிழர்களுக்குப் பாதிப்பையே ஏற்படுத்தும். தற்போதுள்ள 13 ஆவது திருத்தத்தை இழப்பதற்குத் தமிழர்கள் சம்மதிப்பது அல்லது அதுகுறித்து அமைதியாக இருப்பது அரசனை நம்பிப் புருஷனைக் கை விட்டது போல மட்டுமல்லாமல் அரசியல் தற்கொலையுமாகும். எனவே தமிழ் மக்களுக்கு இன்று அவசியமானது இருக்கின்ற 13 ஆவது திருத்தத்தின் முழுமையான அமுலாக்கலே தவிர வரப்போகின்ற புதிய அரசியலமைப்பு அல்ல. வரப்போகிற பட்டுவேட்டிக் கனவில் மிதப்பதை விடுத்து கட்டியிருக்கும் இன்றைய கோவணத்தையாவது காப்பாற்ற வேண்டியதே தமிழர்களுக்குப் பாதுகாப்பானது.

## டிரம்பைக் கொலை செய்யத் திட்டமிட்டவர் இலங்கையில் யூதர்கள் மீது தாக்குதல் மேற் கொள்ளும் பொறுப்பையேற்றிருந்தார் என்கிறது அமெரிக்கா

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் டொனால்ட் டிரம்பை கொலை செய்ய திட்டமிட்டவருக்கு இலங்கையில் யூதர்கள் மீது தாக்குதலை மேற்கொள்வதற்கான பொறுப்பு வழங்கப்பட்டிருந்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலிற்கு முன்னர் டொனால்ட் டிரம்பினை கொலை செய்ய முயன்றார் என ஆப்கானை சேர்ந்த நபர் ஒருவருக்கு எதிராக அமெரிக்கா குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளது.

இந்த நபரிடம் இலங்கையில் யூதர்கள் மீது தாக்குதலை மேற்கொள்ளும் பொறுப்புவழங்கப் பட்டிருந்ததாக அமெரிக்க நீதிதிணைக்களம் தெரிவித்துள்ளது.

ஈரான் இராணுவத்தின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படையை சேர்ந்த பர்ஹாட் சகேரியிடம் இலங்கையில் யூதர்கள் மீது தாக்குதலை மேற்கொள்ளும் பொறுப்பு வழங்கப்பட்டிருந்ததாக அமெரிக்க நீதிதிணைக்களம் தெரிவித்துள்ளது. 51 வயது பர்ஹாட் சகேரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை வெளியிட்டுள்ள அமெரிக்க நீதிதிணைக்களம் இவர் டிரம்பினை கொலை செய்வதற்கான திட்டத்தினை வழங்கினார் என குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலின் துணை தூதரகத்தை கண்காணித்து வேவுபார்த்து பெறப்பட்ட தகவல்களை ஈரானின் புரட்சிகர காவல்படையிடம் ஒப்படைத்ததாக சகேரி எவ்பிஐயிடம் தெரிவித்தார்.

பின்னர் அறுகம்குடாவில் பாரிய துப்பாக்கி பிரயோகத்தினை மேற்




கொள்வதற்கு திட்டமிடுமாறு ஈரான் அதிகாரிகள் சகேரிக்கு உத்தரவிட்டுள்ளனர்.

பர்ஹாட் சகேரி இன்னமும் கைது செய்யப்படவில்லை என தெரிவித்துள்ள அமெரிக்கா அவர் ஈரானில் வசிக்கின்றார் என தெரிவித்துள்ளது.

ஈரான் இந்த குற்றச்சாட்டினை நிராகரித்துள்ளது.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

02 நவம்பர் 2024 - 08 நவம்பர் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கணபதிப்பிள்ளை பத்மாவதி

வேலணை முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 09 நவம்பர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தை களும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம்

சரவணை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பு 6ஐ வதிவிடமாகவும் திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 08 நவம்பர் 2024 வெள்ளிக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 29ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி காமினி சூரியமூர்த்தி

யாழ்.ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி காமினி சூரியமூர்த்தி அவர்களின் 29வது நாள் நினைவு நாள் 10 நவம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி காமினி சூரிமூர்த்தி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 18வது ஆண்டு நினைவஞ்சலி



### DR.சுப்பிரமணியம் சிதம்பரப்பிள்ளை

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளை, கந்தர்மடம், மலேசியா, லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் யாழ்ப்பாணம், கொழும்பு சட்டவைத்திய அதிகாரி Dr சுப்பிரமணியம் சிதம்பரப்பிள்ளை அவர்களது 18வது ஆண்டு நினைவு நாள் 11 நவம்பர் 2024 திங்கட் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். Dr சுப்பிரமணியம் சிதம்பரப்பிள்ளை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு சிவபாலன் சின்னையா


யாழ்ப்பாணம் கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் எட்மண்டன் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சிவபாலன் சின்னையா அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 07 நவம்பர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சிவபாலன் சின்னையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா

மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் யாழ்.கந்தர்மடம், இந்தியா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 07 நவம்பர் 2024 வியாழக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.





## நினைவழியா நினைவுகள்

### திரு பழனி கனகசபை


### திருமதி கனகசபை நாகம்மா

அனலைதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு பழனி கனகசபை, திருமதி கனகசபை நாகம்மா ஆகியோரது நினைவு நாளையொட்டி அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 01 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமை கந்தசஷ்டி உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு, பழனி கனகசபை, திருமதி கனகசபை நாகம்மா தம்பதிகளை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




26 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த லெப்.கேணல் நாதன் என்று அழைக்கப்படும் திரு கந்தையா பேரின்பநாதன் அவர்களது 28வது அண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது சகோதரி திருமதி யோகாம்பிகை இலங்கேஸ்வரன் அவர்கள் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்




26 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை கொக்குவிலைப பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு துரைராஜா தர்மபாலன் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





26 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சோபர் பீற்றர் ஆன் தம்பதிகளின் செல்வப்புதல்வன் எரின்டனின் 14வது பிறந்த நன்நாளாகும். அன்றைய இனிய நன்நாளில் செல்வன் எரின்டன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




27 ஒக்ரோபர் 2024 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சமூகத் தொண்டர் திரு வே.இ.இராசையா அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




29 ஒக்டோபர் 2024 செவ்வாய்க்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா அவர்களதும் திருமதி பார்வதி கந்தையா தம்பதிகளதும் சிரார்த்த தினமாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




31 ஒக்டோபர் 2024 வியாழக்கிழமை உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்.திருநெல்வேலியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினம் தம்பிமுத்து அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




31 ஒக்டோபர் 2024 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலிசா தம்பதிகளின் செல்வப்புதல்வன் டெனன் ஈஸ்வத் சங்கரின் ஒன்பதாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் டெனன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




01 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமை அனலைதீவு 1ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு பழனி கனகசபை திருமதி நாகம்மா கனகசபை இணையர்களது நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னார்களது குடும்பத்தினர் இணையர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




03 நவம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா கதிரித்தம்பி அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாளாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




05 நவம்பர் 2024 செவ்வாய்க்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




07 நவம்பர் 2024 வியாழக்கிழமை மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும் யாழ்.கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




07 நவம்பர் 2024 வியாழக்கிழமை யாழ்.கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் எட்மண்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சிவபாலன் சின்னையா அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




07 நவம்பர் 2024 வியாழக்கிழமை சீரடிபாபா உபயமாக கனடாவில் வசிக்கும் திரு திருமதி சுதர்சன் நிவேதிகா இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




07 நவம்பர் 2024 வியாழக்கிழமை சீரடிபாபா உபயமாக கனடாவில் வசிக்கும் திரு சுப்பிரமணியம் மகாலிங்கம் குடும்பத்தினர் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




08 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமை சரவனை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம் அவர்களது 10வது அண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

# தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்

**THE INTERNATIONAL CENTRE | இன்ரர்நஷனல் சென்ரர்**

6900 Airport Road, Mississauga, Ontario L4V 1E8




## ரொறன்ரோ

27-11-2024

THE INTERNATIONAL CENTRE

6900 Airport Road
Mississauga
ON L4V 1E8

**கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்**

வழமைபோன்று ஒரே இடத்தில் மூன்று நிகழ்வுகள்

1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி

## மொன்றியல்

27-11-2024
புதன்கிழமை
மாலை 5:00 மணி

Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2

## ஒட்டாவா

27-11-2024
புதன்கிழமை
மாலை 5:30 மணி

Nepean Sportsplex - Hall A
1701 Woodroffe Ave,
Nepean, ON K2G 1W2

Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.cm/tamilremembrance

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




08 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமை சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் நவரெலியாவை வதிவிடமாகவும் சிக்காக்கோ அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சின்னம்மா வடிவேலு அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



09 நவம்பர் 2024 சனிக்கிழமை வேலணை முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கணபதிப்பிள்ளை பத்மாவதி அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




10 நவம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை யாழ்.ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி காமினி சூரியமூர்த்தி அவர்களது 29ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




11 நவம்பர் 2024 திங்கட்கிழமை வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்.பிறவுன் வீதியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சதாசிவம் சண்முகம் அவர்களது 44வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



11 நவம்பர் 2024 திங்கட்கிழமை புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்.பிறவுன் வீதியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அமராவதி சண்முகம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




11 நவம்பர் 2024 திங்கட்கிழமை மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முத்தர் இரத்தினம் அவர்களது 28வது ஆண்டு நினைவு நாளகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



11 நவம்பர் 2024 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நிர்மலகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கார்த்தி நிர்மலகுமாரின் 8வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கார்த்தி தனது பெற்றோர்கள் சகோதரி ஜெனனி ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



11 நவம்பர் 2024 திங்கட்கிழமை மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளை, கந்தர்மடம், மலேசியா லண்டன் கனடா ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்ப்பாணம் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி Dr சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்களது 18வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




11 நவம்பர் 2024 திங்கட்கிழமை மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளை, கந்தர்மடம், மலேசியா லண்டன் கனடா ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்ப்பாணம் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி Dr சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்களது 18வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

## 9வது பிறந்த நன்நாள் வாழ்த்து

கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலிசா தம்பதிகளின் செல்வப்புதல்வன் டெனன் ஈஸ்வத் சங்கரின் ஒன்பதாவது பிறந்த நன்நாள் 31 ஒக்டோபர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றையதினம் செல்வன் டெனன் தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதிஇல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

அகவை ஒன்பது காணும் செல்வன் டெனன் ஈஸ்வத் சங்கர் பல்கலையும் கற்றுப் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ வேண்டுமென வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர் களும் வாழ்த்துகின்றார்கள்.

வாழ்க வளமுடன்!




**செல்வன்**
**டெனன் ஈஸ்வத் சங்கர்**


நாட்டின் முதல் மின் வாகன மின் கல தொழிற்சாலைகள் மூலம் ஒன்டாரியோவின் பொருளாதாரத்தை மீண்டும் வளர்த்தல்
விண்ட்சர் மற்றும் செயிண்ட். தாமஸில் உள்ள புதிய மின் வாகன மின் கல தொழிற்சாலைகள் அதிக ஊதியம் அளிக்கும் புதிய வேலைவாய்ப்புகளையும் ஒன்டாரியோ முழுவதும் ஆற்றல் மிக்க பொருளாதார வளர்ச்சியையும் உருவாக்குகின்றன.
இவை எல்லாமே இங்கே நடக்கின்றன.
ontario.ca/RebuildingOurEconomy
ஒன்டாரியோ அரசாங்கத்தின் நிதியுதவியுடன்
Ontario


ஈழமுரசு
ஈழமுரசும் கனடா வாழ் தமிழ் மக்களும் பெருமையுடன் கொண்டாடும் தமிழீழத் தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின்
70
தலைவர் பிறந்தநாள் அதுவே தமிழர் நிமிர்ந்த நாள் !
வீழ்ந்து விடாத வீரம் மண்டியிடாத மானம்
இருப்பாய் தமிழா நெருப்பாய் !
AAROSAI
அகவை விழா
மாபெரும் எழுச்சி விழா
2024
நவம்பர் 26 செவ்வாய்க்கிழமை
மாலை 5 மணி
TORONTO
METROPOLITAN CENTRE
3840 Finch Ave East
Scarborough, ON, M1T 3T4
(Kennedy & Finch)
MONTREAL
LE CHATEAU ROYAL
3500 Bd du Souvenir
Laval, Montreal, QC,
H7V 1X2, (514) 660-5891

# தேசியம் என்றால் என்ன என்று கேட்கும் ஒரு தேர்தல் களம்?

பிபிசி தமிழ்ச்சேவை கடந்த 7 ஆம் தேதி ஒரு கட்டுரையைப் பிரசுரித்திருந்தது. அக்கட்டுரை வன்னி தேர்தல் தொகுதியில் உள்ள உள்ள அரசியல் வாதிகளையும் பொது மக்களையும் நேர்கண்டு எழுதப்பட்டுள்ளது. அதில்



தேசியம்.சமஸ்டி. 13 ஆவது திருத்தம் போன்றவார்த்தைகளின் அர்த்தம் அனேக மானவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. அதில் நேர்காணப்பட்ட அரசியல்வாதிகளுக்கும் அதுதொடர்பாக முழுமையான விளக்கம் இருக்கவில்லை.

அது போலவே சுமந்திரனின் பிரச்சாரக் காணொளி ஒன்றில் அவர் தேசியம் என்றால் என்ன என்று கேட்கிறார். அந்த வார்த்தையை பயன்படுத்தும் பலருக்கு அதன் அர்த்தம் தெரியாது என்ற பொருள்பட கருத்துரைக்கிறார். மேலும் அவருடைய பிரச்சார காணொளிகளில் அவர் அறிவார்ந்த தமிழ் தேசியத்தின் குரல் என்று அழைக்கப்படுகிறார். அறிவார்ந்த தமிழ்த் தேசியம் என்றால் என்ன?

அது போலவே மான் சின்னத்தின் கீழ் போட்டியிடும் மணிவண்ணன் நவீன தமிழ்த் தேசியம் என்ற ஒரு வார்த்தையை பயன்படுத்துகிறார். நவீன தமிழ் தேசியம் என்றால் என்ன?

சுமந்திரன் அந்தக் காணொளியில் கேட்பது போல, பிபிசி தமிழில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையில் கூறப்பட்டிருப்பது போல தேசியம் என்றால் என்ன என்ற கேள்விக்கு வாக்காளப் பெருமக்களுக்கு மட்டுமல்ல பல வேட்பாளர்களுக்கே பதில் தெரியாது. ஒரு ஆயுதப் போராட்டத்தை நடத்தி ஒரு கருநிலை அரசை நிர்வகித்து அது தோற்கடிக்கப்பட்ட கடந்த 15 ஆண்டுகளின் பின்னரும் தேசியம் என்றால் என்ன என்று கேட்கும் ஒரு நிலைமைதான் காணப்படுகின்றதா? தமிழ் அரசியல்வாதிகள் எத்தனை பேர் இந்த கேள்விக்கு பொருத்தமான விடையைக் கூறுவார்கள்? அவர்களுக்கு பொருத்தமான விடை தெரிந்திருந்தால் தமிழரசியல் இப்போதுள்ள சீரழிவான நிலைக்கு வந்திருக்காது.

எனவே முதலில் நாங்கள் ஒரு தெளிவிற்கு வருவோம். தேசம், தேசியம் என்றால் என்ன என்பதனை சுருக்கமாகப் பார்க்கலாம். தேசம் என்பது ஒரு பெரிய மக்கள் திரள். ஒரு மக்கள் கூட்டத்தை பின்வரும் அம்சங்கள் தேசமாக வனைகின்றன.

முதலாவது பாரம்பரிய தாயகம் அல்லது நிலம். இரண்டாவது இனம் அல்லது சனம். மூன்றாவது பொதுவான மொழி. நாலாவது பொதுவான பண்பாடு. ஐந்தாவது பொதுவான பொருளாதாரம். இந்த ஐந்தையும் விட ஆறாவதாக ஒரு விடயமும் உண்டு. அதுதான் அடக்குமுறை. ஒரு மக்கள் கூட்டத்தின் தேசிய அடையாளங்களை அழிக்கும் நோக்கத்தோடு கட்டமைக்கப்படும் இன அழிப்பு நடவடிக்கைகளும் ஒரு மக்கள் கூட்டத்தை தற்காப்பு உணர்வோடு தேசமாகத் திரட்டுகின்றன.

எனவே இப்பொழுது தெளிவான ஒரு முடிவுக்கு வரலாம். தேசியவாத அரசியல் என்பது அல்லது தேசியம் என்பது ஒரு மக்கள் கூட்டத்தை தேசமாக வனையும் அம்சங்களைப் பாதுகாப்பதும் பலப்படுத்துவதுந்தான். அதாவது அதை அதன் பிரயோக அர்த்தத்தில் கூறின், ஒரு மக்கள் கூட்டத்தை உருகிப் பிணைந்த பெருந் திரளாகத் திரட்டுவது.

ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக எந்த ஒரு கட்சியாவது மக்களைத் தேசமாகத் திரட்டுவதில் வெற்றி பெற்றிருக்கிறதா? இல்லை. இதற்கு முதற்பொறுப்பு தமிழரசுக் கட்சி தான். ஏனெனில் உள்ளதில் பெரிய கட்சி அது. வடக்கு கிழக்காக ஒப்பீட்டளவில் பரந்த கட்டமைப்பை கொண்டிருக்கும் கட்சி. கடந்த15 ஆண்டுகளாக தமிழ் மிதவாத அரசியலின் பிரதான தீர்மானிக்கும் சக்தியாக இருந்த கட்சி. எனவே கடந்த 15 ஆண்டு காலத்தில் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டத் தவறியதற்கு அக் கட்சி தான் முதல் பொறுப்பு. தமிழ்த் தேசிய வரலாற்றில் உருவாகிய, பெரிய கூட்டாகிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சிதைவதற்கு காரணம்.த மிழரசுக் கட்சிதான். கூட்டமைப்பிலிருந்து பங்காளிகளை படிப்படியாக அகற்றும் ஒரு போக்கின் விளைவாக இப்பொழுது தமிழரசு கட்சி தானும் இரண்டாகி, பலவாகி நிற்கிறது.

அடுத்தது, தமிழ்த் தேசிய முன்னணி. தேசியவாத அரசியல் என்பதனை தூய்மை வாதமாக சித்திரித்து, தனது அரசியல் எதிரிகளை துரோகிகள், காட்டிக் கொடுப்பவர்கள் இந்தியாவின் ஏஜென்ட்கள் என்று முத்திரை குத்துவதன் மூலம் அந்தக் கட்சி கடந்த 15 ஆண்டுகளாக தேசத்தை திரட்டத் தவறிவிட்டது. சிறிய கவனஈர்ப்பு போராட்டங்களை நடத்துவது போலீசாரோடு, புலனாய்வுத் துறையோடு மோதுவது விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நினைவு நாட்களைத் தத்தெடுப்பது போன்றவற்றின் மூலம் அக்கட்சி தன்னை ஆயுதப் போராட்டத்தின் ஏக போக வாரிசாகக் கட்டமைக்கப் பார்க்கின்றது.

தன்னை ஆயுதப் போராட்டத்தின் ஏக போக வாரிசாகக் காட்டிக் கொள்வதே அடிப்படைத் தவறு. ஆயுதப் போராட்டம் வேறு. மிதவாத அரசியல் வேறு. இரண்டாவது தவறு, தங்களைப் புனிதர்களாக காட்டுவதற்காக தமது அரசியல் எதிரிகளை சாத்தான்களாக துரோகிகளாக சித்தரிப்பது. மற்றவர்களை துரோகிகள் என்று முத்திரை குத்துவதன் மூலம் யாரும் தங்களை தியாகிகள் ஆக்கி விட முடியாது. மாறாக முன்னுதாரணம் மிக்க தியாகங்களைச் செய்வதன் மூலம் தான் யாரும் தங்களைத் தியாகிகள் ஆக்கலாம்.

அரசியல் களத்தை தியாகி எதிர் துரோகி என்று பிரிப்பது தேசத்தை திரட்டுவதற்கு உதவாது. தேசம் என்பது ஒரு சமூகத்தின் பலம் பலவீனம் எல்லாவற்றினதும் திரட்சி தான். நல்லவர்கள் கெட்டவர்கள் எல்லாருடையதும் திரட்சி தான். முன்னணியின் கடந்த 15 ஆண்டுகால அரசியல் என்பது தேசத்தைத் திரட்டுவது அல்ல. தேசத்தை சிதறடிப்பது தான். அதன் விளைவாக கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது அக்கட்சிக்குள்ளே உடைவு ஏற்பட்டது. தமிழரசுக் கட்சியைப் போலவே அவர்களும் தோல்விகளில் இருந்து எதையுமே கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. தமிழரசு கட்சிக்கு எதிராக ஒரு மாற்றாக எழுவது என்பது தேசத்தைச் சிதறடிக்கும் அரசியலுக்கு எதிராக தேசத்தைத் திரட்டும் அரசியல் தான்.

அடுத்தது குத்து விளக்குக் கூட்டணி. இப்பொழுது அது சங்கு கூட்டணி. தொடக்கத்திலிருந்து தன் சொந்தப் பலத்தை நம்பாத ஒரு கூட்டு அது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் ஜனநாயகம் என்ற ஒரு சொல்லை முன்னொட்டுவதன் மூலம் தன்னை மெய்யான கூட்டமைப்பாக காட்ட அவர்கள் முயன்றார்கள். கட்சிப் பெயருக்குத் தான் வாக்கு விழும் என்று அவர்கள் நம்புகிறார்கள். அதுபோலவே ஜனாதிபதி தேர்தலில் கட்டி எழுப்பப்பட்ட சங்குச் சின்னத்தைக் கைப்பற்றியதின் மூலம் பொது வேட்பாளருக்கு கிடைத்த வெற்றிகளை தங்களுக்கு மடை மாற்றலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். அதாவது ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட பெயர், இடையில் ஸ்தாபிக்கப்பட்ட சின்னம் என்பவற்றை தம் வசப்படுத்துவதன் மூலம் வாக்குகளைக் கவரலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். இது ஒரு தேர்தல் உத்தி மட்டுமே. எல்லா தேர்தல் உத்திகளும் தேசத்தை திரட்டுவன அல்ல.

எனினும், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தேசத்தைத் திரட்டும் கோஷத்தின் கீழ் இந்த கூட்டு பொதுக் கட்டமைப்புக்குள் ஓர் அங்கமாக இருந்தது. பொது வேட்பாளரை முன்நிறுத்தி ஒரு பொதுக் கோரிக்கையாகிய தேசத்தை திரட்டும் கோரிக்கைக்காக உழைத்த கட்சிகள் இந்த கூட்டுக்குள் உண்டு. ஆனால் அந்த உழைப்பின் விளைவாக ஸ்தாபிக்கப்பட்ட சங்கு சின்னத்தை கைப்பற்றும் விடயத்தில் அவர்கள் தேசத் திரட்சியா? அல்லது கட்சி அரசியலா? அல்லது தேர்தல் வெற்றியா? என்று முடிவெடுக்க வேண்டி வந்த பொழுது. இக்கூட்டானது கட்சி அரசியல் சார்ந்த தேர்தல் வெற்றிக்கு முன்னுரிமை வழங்கியது. எனவே தேசத் திரட்சிக்கு அவர்கள் விசுவாசமாக இருக்கிறார்களா இல்லையா என்பதனை அவர்கள் மீண்டும் எதிர் காலத்தில் நிரூபிக்க வேண்டியிருக்கும்.

அடுத்தது மான் கட்சி. இக்கட்சியும்

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**- நிலாந்தன் -**



பொது வேட்பாளரை முன் நிறுத்திய பொதுக் கட்டமைப்பில் ஒரு அங்கமாக இருந்தது. விக்னேஸ்வரன் அரசியலில் இருந்து அனேகமாக ஒதுங்கிவிட்டார். கட்சியின் முதன்மை வேட்பாளராகக் காணப்படும் மணிவண்ணன் தன்னுடைய தாய்க் கட்சியாகிய தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியிடமிருந்து எங்கே துலக்கமான விதங்களில் வேறுபடுகிறார் என்பதனை இனி நிரூபிக்க வேண்டியிருக்கும்.

மற்றவை சுயேச்சைகள். இம்முறை தேர்தலில் அதிகம் சுயேச்சைகள் தோன்றக் காரணமே பிரதான கட்சிகளின் தோல்வி தான். பிரதான கட்சிகளில் இருந்து வெளிவந்த ஒரு பகுதியினர் சுயேச்சையாக நிற்கிறார்கள். பிரதான கட்சிகளால் உள்வாங்கப்படாதவர்களும் சுயேச்சையாக நிற்கின்றார்கள். தலைமைத்துவ வெற்றிடம் காரணமாக யாராவது தங்களை வந்து மீட்க மாட்டார்களா என்று காத்திருக்கும் தமிழ் கூட்டு உளவியல் காரணமாக திடீரென்று பிரபல்யம் ஆகிய அர்ஜுனாவை போன்றவர்களும் சுயேச்சையாக நிற்கிறார்கள். யார் எதற்காக நின்றாலும் சுயேச்சைகள் அதிகரிப்பதற்கு காரணம் பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகள் தேசத்தைத் திரட்டத் தவறியமை தான். எனவே இம்முறை தேர்தல் களம் தமிழ் மக்களுக்கு உணர்த்துவது எதை என்று சொன்னால், தமிழ்த் தேசியம் பேசும் எல்லாக் கட்சிகளுமே தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் விடயத்தில் தோல்வி அடைந்து விட்டன என்பதைத் தான்.

இந்த அடிப்படையில் பார்த்தல் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ்ப் பொது வேட்பாளர் பெற்ற வெற்றி அரிதானது. அது ஒரு மிகப் பெரிய வெற்றி இல்லைத் தான். ஆனாலும் அடிப்படை வெற்றி. அந்த முயற்சியில் ஈடுபட்ட கருத்துருவாக்கிகளை பத்தி எழுத்தாளர்கள் என்று சிறுமைப்படுத்தியது ஒரு பகுதி. தமிழில் பத்தி எழுத்தாளர் என்ற வார்த்தை அதிகம் அவமதிக்கப்பட்ட ஒரு காலகட்டம் அது. அதாவது தேசத்தைத் திரட்ட முற்பட்ட குற்றத்துக்காக அதில் முன்னணியில் நின்றவர்களை சிறுமைப் படுத்த அந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டது.(20ம் பக்கம் பார்க்க)

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சின்னம்மா வடிவேலு

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் நுவரெலியாவை வதிவிடமாகவும் சிக்காகோ அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சின்னம்மா வடிவேலு அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 08 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சின்னம்மா வடிவேலு அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தின ருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# சமூகத்திற்குள் ஊடுருவும் சீனா

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தை அடுத்து சீனா தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தவும், விரைவுபடுத்தவும் ஆரம்பித்திருக்கிறது. மார்க்சிஸ்ட் ஜனாதிபதி என மேற்குலக ஊடகங்களால் வர்ணிக்கப்பட்ட அநுரகுமார திசாநாயக்க, பதவிக்கு வந்த பின்னர், இலங்கை அரசாங்கத்துடன் சீனாவின் ஈடுபாடு அதிகரித்திருக்கிறது. அது வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. 2025 ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான சீருடைத் துணிமுழுவதையும் சீனாவே கொடையாக வழங்குவதாக அறிவித்திருக்கிறது.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட பின்னர், இலங்கை மாணவர்களுக்கு சீருடைத் துணிகளை வழங்குவதற்கு சீனா முன் வந்தது. 2023ஆம் ஆண்டு, 70 சதவீதமான சீருடைத் துணியை சீனா கொடையாக வழங்கியது. எஞ்சிய 30 சதவீதத்திற்கு இலங்கை அரசாங்கம் பணத்தை செலுத்தியது. 2024 ஆம் ஆண்டு 80 சதவீத சீருடை துணி சீனாவினால் கொடையாக வழங்கப்பட்டது. எஞ்சிய 20 சதவீதமும் இலங்கை அரசாங்கத்தினால் பணம் கொடுத்து தீர்க்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருந்த போது இலங்கை பொருளாதார நெருக்கடியின் உச்சக் கட்டத்தில் இருந்த போது கூட, சீனா 100 சதவீத சீருடை துணியை மாணவர்களுக்கு கொடையாக வழங்குவதற்கு முன் வந்திருக்கவில்லை. கொடுத்ததாகவும் இருக்க வேண்டும், அதே வேளை முழுமையாக கொடுக்காமலும் இருக்க வேண்டும் என்ற தொனியில் சீனா நடந்து கொண்டது.

70 சதவீத சீருடைத் துணியை கொடையாக வழங்கிய சீனாவுக்கு எஞ்சிய 30 சதவீதத்தையோ அடுத்த முறை 20 சதவீதத்தையோ கொடையாக வழங்குவது ஒன்றும் சிக்கலானதாக இருந்திருக்காது. ஆனாலும் அப்போது சீனா ஒரு பகுதிக்கான கொடுப்பனவை இலங்கை அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொண்டது.

அநுரகுமார திசாநாயக்க பதவிக்கு வந்த பின்னர், சீன அரசாங்கம் 100 சதவீத சீருடை துணியையும் கொடையாகவே வழங்குவதற்கு தீர்மானித்திருக்கிறது. இது இலங்கைக்கு உதவ வேண்டும் என்பதற்காக எடுக்கப்பட்ட முடிவா அல்லது அநுரகுமார திசாநாயக்க அரசாங்கத்தை பலப்படுத்த வேண்டும் என்பதற்காக எடுக்கப்பட்ட முடிவா என்பது கேள்வி. ஏனென்றால், இலங்கையில் அடுத்தடுத்து சமூக நலத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு, சீனா விரைவாக நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியிருக்கிறது.

அவற்றில் ஒன்று சீருடை துணி வழங்குதல். இன்னொன்று வீடமைப்பு திட்டம். குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு சீனா 1996 வீடுகளை அமைத்துக் கொடுக்கப் போகிறது. இந்த திட்டத்திற்கு கடந்த வாரம் அமைச்சரவை அனுமதி அளித்திருக்கிறது. 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்த வீடமைப்பு திட்டத்திற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.



அப்போது கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியில் இருந்தார். அவரும் சீனாவுக்கு சார்பான ஒருவர், சீனா விரும்பிய ஒருவர். அவரை பலப்படுத்தும் வகையில் அரசாங்கத்திற்கு உதவும் வகையில் தான் சீனா இந்த வீடுகளை அமைத்துக் கொடுக்க முன் வந்தது.

ஆரம்பத்தில் சீனா 2500 வீடுகளை அமைத்துக் கொடுக்கும் என பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த அருந்திக்க பெர்னான்டோ அறிவித்திருந்தார். ஆனால் பின்னர் அந்த எண்ணிக்கை 1996 ஆக குறைந்து போனது.

முதலில் இந்த வீடுகளை அமைப்பதற்காக 200 மில்லியன் டொலர்கள் நிதியை இலங்கை அரசாங்கத்திடம் சீனா வழங்கும் என்று கூறப்பட்டது. ஆனால் சீனா அதனை .லங்கைக்கு கொடுப்பதற்கு முன்னரே கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் ஆரம்பமாகி அவர் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டார். அதற்குப் பிறகு ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இந்த வீடமைப்பு திட்டத்தை செயற்படுத்த முற்பட்டாலும் அவ்வப்போது அறிவிப்புகள் வெளியிடப்பட்டதே தவிர, விரைவுபடுத்தப்படவில்லை. ஆனால் அநுரகுமார திசாநாயக்க பதவிக்கு வந்த சில வாரங்களிலேயே இந்த வீடமைப்பு திட்டத்தை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சீனா முன்னெடுத்திருக்கிறது.

இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. ஆனால் அதை திட்டத்தை முன்னெடுக்கப் போவது இலங்கை அரசாங்கம் அல்ல. இதில் இலங்கை அரசாங்கத்துக்கு இருக்கின்ற ஒரே பங்கு வீடமைப்பு திட்டத்திற்கு தேவையான நிலத்தை வழங்குவது மாத்திரமே. சீன அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட எட்டு சீன ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஏலங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் திட்டத்திற்கு முழு நிதியுதவி மற்றும் கட்டுமானத்தை மேற்பார்வையிடும், என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்திருந்தார்.

மொரட்டுவவில் 575 வீடுகளையும், கொட்டாவவில் 108 வீடுகளையும் நிர்மாணிக்கும் பொறுப்பு, ரயில்வே 25ஆவது பிரிவு குரூப் நிறுவனத்திடமும், தெமட்ட கொடவில் 586 வீடுகளையும் மகரகமவில் 112 வீடுகளையும் கட்டும் பணியை சைனா ஹார்பர் இன்ஜினியரிங் நிறுவனத்திடமும், பேலியகொடவில் 615 வீடுகளை அமைக்கும் பணி சான்ஷி கொன்ஸ்ட்ரக்சன் இன்வெஸ்ட்மெண்ட் குரூப் நிறுவனத்திடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சீன அரசாங்கத்திடம் இருந்து நிதியை பெற்று இந்த நிறுவனங்களை வீடுகளை அமைத்து கொடுக்கும். இந்த நிறுவனங்களின் தொழிலாளர்கள் சீனாவில் இருந்து கொண்டு வரப்படுவார்கள். பெரும்பாலான மூலப் பொருட்களும் அங்கிருந்தே கொண்டு வரப்படும்.

ஆக இந்தக் கொடை 1996 குடும்பங்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுக்குமே தவிர அதனை சார்ந்து உருவாகக் கூடிய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தவோ வேறு வர்த்தக சாத்தியப்பாடுகளை ஏற்படுத்தவோ மாட்டாது. உள்நாட்டு தொழிலாளர்கள் வேலை கிடைக்காமல் உள்ள நிலையில் அவர்கள் வெளிநாடுகளை நோக்கி புலம்பெயர்ந்து வருகின்ற சூழலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சீனாவின் இந்த திட்டத்திற்கு இணங்கி இருக்கிறது. இவை மாத்திரமன்றி சீனா அடுத்தடுத்து இன்னும் பல உதவித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு தயாராக கொண்டிருக்கிறது.


அது வடக்கிலும் கூட முன்னெடுக்கப்பட உள்ளது. அதற்காக சீன தூதுவர், விரைவில் வடக்குக்கு பயணம் மேற்கொள்வார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்மையில் கெப்பிட்டிபொல பாடசாலையில் நடந்த மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய சீன தூதுவர் கீ சென்ஹொங், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வலுவான தலைமையின் கீழ், இலங்கை அரசாங்கமும் மக்களும் நிச்சயமாக தன்னம்பிக்கையுடன், பல்வேறு இடர்களையும் சவால்களையும் கடந்து, விரைவாக மீண்டு, பொருளாதாரத்தை புத்துயிர் பெற வைக்க முடியும் என தெரிவித்திருந்தார். சர்வதேச நிலைமைகள் எப்படி மாறினாலும், சீனா எப்போதும் இலங்கை மக்களுடன் நிற்கும். இலங்கையின் நம்பகமான நண்பனாகவும் நல்ல பங்காளியாகவும் உள்ளது. இலங்கை தற்போது புதிய சகாப்தத்தில் பிரவேசித்துள்ளதுடன், சீன அரசாங்கமும் மக்களும் தங்களால் இயன்ற வகையில் இலங்கைக்கு பல்வேறு வகையான உதவிகளை தொடர்ந்தும் வழங்குவார்கள்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் வலுவான தலைமையின் கீழ், வீர உணர்வை முன்னெடுத்துச் செல்வதன் மூலம், இலங்கை அரசாங்கமும் மக்களும் நிச்சயமாக புத்துயிர் பெற முடியும் என்றும் என்றும் அவர் கூறியிருந்தார்.

அதாவது அநுரகுமார திநாசாயக்கவின் அரசாங்கத்தை பாதுகாப்பது அல்லது தற்போதைய நிலையில் இருந்து மேலே கொண்டு வருவது என்ற இலக்கில் சீனா உறுதியாக இருக்கிறது. அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கின்ற ஆட்சி மாற்றம், சீனா இலங்கையில் தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கு கை கொடுக்கும் என்றே தெரிகிறது. இந்த நிலையில் இலங்கையில் தனது செல்வாக்கை இந்தியா எப்படி நிலைநிறுத்த போகிறது?

(7ம் பக்கத் தொடர்ச்சி) வாக்கியவை. ஆனால் இந்த விடயத்தில் கொழும்பு போன்ற மாநகரங்களில் காணப்படும் வளர்ச்சிகள் தமிழ்ப் பகுதிகளில் இல்லை. மாநகரங்களில் விளம்பரம் ஒரு பெருந்துறையாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. அங்கெல்லாம் விளம்பரத்துக்கு என்று பெரிய நிறுவனங்கள் உண்டு. அவை விளம்பரத்தை அதற்குரிய கலைப் பெறுமதியோடு வடிவமைப்பவை. அதற்காக கோடிக்கணக்காக பணம் வாங்குபவை. தொழிற்துறை வளர்ந்த மாநகரங்களில் விளம்பரம் கோடிகள் புரளும் ஒரு தொழில்துறை. தெற்கில் பெரும்பாலான பிரதான கட்சிகள் தமது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை தொழிற்சார் விளம்பர நிறுவனங்களிடம் ஒப்படைக்கின்றன. அதற்காக கோடிக்கணக்காக செலவழிக்கின்றன. அந்த நிறுவனங்கள் தேர்தல் பிரச்சாரத்தை கலைத் தாக்கத்தோடும் சராசரி வாக்காளர்களைச் சென்றடையக்கூடிய வியாபார உத்திகளோடும் தயாரிக்கின்றன. அந்தப் பிரச்சார காணொளிகளுக்கு கலைப் பெறுமதியும் உண்டு சந்தைப் பெறுமதியும் உண்டு. ஆனால் தமிழ் காணொளிகள் பலவற்றில் அவ்வாறு கலைப் பெறுமதியைக் காண முடியவில்லை. ஏனென்றால் தமிழ்ப் பகுதிகளில் விளம்பரம் ஒரு கலையாகவும் தொழிலாகவும் வளரவில்லை. இந்தப் பற்றாக்குறையை தமிழ் கட்சிகளின் விளம்பரப் பிரச்சாரக் காணொளிகளில் காணக்கூடியதாக உள்ளது.

## 44வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சதாசிவம் சண்முகம்

வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுன் றோட்டை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு சதாசிவம் சண்முகம் அவர்களது 44வது ஆண்டு நினைவு நாள் 11 நவம்பர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் இணைந்து அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சதாசிவம் சண்முகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அமராவதி சண்முகம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்.பிறவுண் றோட்டை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அமராவதி சண்முகம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவுநாள் 11 நவம்பர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் இணைந்து அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி அமராவதி சண்முகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# மாற்றத்துக்கான தேர்தல்:- நேர் நிலையும் எதிர் நிலையும்

ஜனநாயக அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள வாய்ப்பையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி தங்களுடைய ஆட்சிப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதை மக்கள் எப்போதும் சரியாகத் தான் செய்கிறார்களா? பல சந்தர்ப்பங்களிலும் இல்லை. அல்லது குறைவு என்றே சொல்ல வேண்டும்.

சரியான முறையில் (பொருத்தமான) நற்கொள்கை, சிறந்த செயலாற்றல், நற்பண்பு, பொறுப்புக்கூறும் கடப்பாடு போன்றவற்றைக் கொண்ட தரப்பைத் தெரிவு செய்திருந்தால் — தவறான தரப்பை நிராகரித்திருந்தால் நாடும் சமூகமும் (மக்களும்) பல முன்னேற்றங்களை எட்டியிருக்கும்.

இப்போதுள்ள பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடி போன்றவற்றில் சிக்கியிருக்காது. மக்களும் இனமாக, மொழியாக, மதமாகப் பிளவுண்டிருக்க மாட்டார்கள். வெளிச்சக்திகளின் அதிகரித்த தலையீடுகளுக்கு நாடு உட்பட்டிருக்காது. கடன் பொறிக்குள் சிக்க வேண்டியிருக்காது. யுத்தம், போராட்டம் போன்ற காரணங்களால் பல்லாயிரக்கணக்கானோரின் உயிர் இழக்கப்பட்டிருக்காது. ஊழலும் அதிகார துஸ்பிரயோகமும் நடந்திருக்காது. இயற்கை வளங்கள் அபகரிக்கப்பட்ருக்காது. இயற்கை வளச் சிதைப்பு நிகழ்ந்திருக்காது.

ஆகவே நாட்டிலே ஏற்பட்ட அழிவு, நெருக்கடிகள், பின்னடைவுகள் அனைத்துக்கும் ஆட்சி அதிகாரத்தில் இருந்தோர் மட்டுமல்ல, மக்களும் பொறுப்புடையவர்களே. அதற்கான பொறுப்பை மக்கள் ஏற்கத் தான் வேண்டும்.

பொருத்தமானவர்களை சிறப்பானவர்களை நல்லவர்களை நற்சக்திகளை தெரிவு செய்யாமல் புறக்கணித்து விட்டு, தவறானோரையும் பிழையான சக்திகளையும் தெரிவு செய்தற்கான தண்டனையையே மக்கள் பெற்றனர்.

தேர்தலில் மக்களுக்கு வழங்கப்படும் நல் வாய்ப்பைப் பொறுப்புடன் ஏற்றுச் செயற்படாமல் விட்டால், அதனுடைய விளைவுகளை மக்களே ஏற்க வேண்டும். நல்ல சரியான தெரிவுகளைச் செய்தால் நன்மைகளும் சிறப்பும் விளையும். தவறான பொருத்தமற்ற தெரிவுகள் என்றால், பின்னடைவுகளும் அழிவுகளும் ஏற்படும். ஜனநாயகத் தெரிவின் அடிப்படையே இது தான்.

தவறானோரை அல்லது தவறான சக்திகளைத் தெரிவு செய்து விட்டால், அவர்களை மாற்றுவதற்கும் புறமொதுக்குவதற்குமே ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை தேர்தல் வருகிறது. அப்படி வரும் வாய்ப்பைப் பயன்படுத்தி, குப்பைகளைப் புறமொதுக்க வேண்டும். அதைச் செய்யத் தவறுவதே பல சந்தர்ப்பங்களிலும் நடக்கிறது.

இதற்கு என்ன காரணம்? இதற்குரிய விழிப்புணர்வை உரிய தரப்புகள் மக்களுக்குச் செய்வதில்லை என்பது முக்கியமானது. ஊடகங்கள், புத்திஜீவிகள், சமூக இயக்கங்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் போன்ற தரப்புகள் கூட பெரும்பாலும் மக்களை வழிப்படுத்துவதற்குப் பதிலாக, அவர்களிடம் அறிவூட்டலை — விழிப்புணர்வை — ஏற்படுத்துவதற்கு மாறாக 'மக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கிறோம்' என்று தவறான முறையிலேயே செயற்படுகின்றன. மக்களுடைய பிழையான உணர்வுகளுக்கும் முடிவுகளுக்கும் பின்னால் இழுபடுகின்றன.

ஆனால், ஜனநாயக அடிப்படையைக் கொண்ட நாட்டில் சூழலில் ஊடகங்கள், புத்திஜீவிகள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், சமூக இயக்கங்கள் போன்ற தரப்புகளுக்கு முக்கியமான பங்குண்டு. இந்தத் தரப்புகள் தான் ஜனநாயகச் செழுமையை உண்டாக்க வேண்டியவை. இவை தான் ஜனநாயகத்தின் காப்பரண்கள். இவை தான் ஜனநாயகத்தின் ஊட்டச் சக்திகள். ஆனால், இங்கே என்ன நடக்கிறது?

ஜனநாயகச் சீரழிவுக்கு இவை துணை போகின்றன. இவற்றின் செயலின்மை அல்லது செயற்பாட்டுப் போதாமை, ஜனநாயகச் சீரழிவுக்கு வழிவகுக்கு கிறது.

ஆகவே தான் இலங்கை போன்ற நாடுகள் இன்னும் ஜனநாயக அரசியற் பண்பாட்டில் முன்னேறவில்லை.



என்பதால் தான் இங்கே இன்னும் பிரபுத்துவ மனோநிலை மக்களிடம் சமூகத்திடம் அதிகமாக உண்டு. சாதியாகவும் மதமாகவும் இனமாகவும் மொழியாகவும் மக்கள் சமனற்ற நிலையில் காணப்படுவதற்கும் பிளவுண்டிருப்பதற்கும் ஜனநாயக அடிப்படையில் ஏற்பட்ட ஓட்டைகளே காரணமாகும்.

இந்த ஜனநாயக ஓட்டைகள் மக்கள் இயக்கங்களின், ஊடகங்களின், புத்திஜீவிகளின், எழுத்தாளர்களின், மாணவர் அமைப்புகளின் பொறுப்பின்மையினாலும் தவறுகளாலும் ஏற்பட்டவையே. என்பதால்தான் மக்கள் இன்னமும் தேர்தல்களின் தவறான தெரிவுகளை அணுகுமுறைகளைக் கையாள்கிறார்கள்.

தேர்தலின் போது வாக்காளர்கள் சில அடிப்படையில் பிரிந்து செயற்படுவதுண்டு.

1.தாங்கள் விரும்புகின்ற கட்சிக்கு அல்லது சின்னத்துக்கு வாக்களிப்பது.

இது பெரும்பாலும் குறித்த கட்சியின் கொள்கையோடு சம்மந்தப்பட்டதாக இருக்கும். சிலவேளை அந்தக் கொள்கையில் சறுக்கல்கள் சமரசங்கள் வீழ்ச்சிகள் இருந்தாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல், தாமும் தமது குடும்பத்தினரும் தொடர்ச்சியாக குறித்த கட்சியை அல்லது குறித்த சின்னத்தை ஆதரித்து வந்தவர்கள் என்பதற்காகத் தொடர்ந்தும் வாக்களிப்பது.

இங்கே அவர்கள் கட்சிக்கு அப்பால் எப்படிச் சிந்திக்க முடியாதவர்களாக இருக்கிறார்களோ, அப்படித்தான் நிறுத்தப்பட்டிருக்கும் வேட்பாளரையோ அவருடைய தகுதி மற்றும் பொருத்தப்பாடுகளையோ பார்ப்பதில்லை. அது அவர்களுக்கு அவசியமுமில்லை. தாங்கள் இன்ன கட்சியின் ஆதரவாளர்கள் என்பது மட்டுமே அவர்களுடைய புலனில் (தலைக்குள்) இருக்கும்.

இது ஒருவகையில் அடிமை மனோநிலை தான். அறிவியலுக்கு முரணான எதுவும் அடிப்படைவாதத்தில் அடிமை நிலையில் தான் இருக்கும்.

இதில் அவர்கள் தேர்தல் என்பது ஜனநாயக விழுமியத்தின்பாற்பட்ட ஒன்று எனச் சிந்திப்பதேயில்லை. ஜனநாயகம் வழங்கும் சிறந்த பெறுமானத்தின் அடிப்படையில் பொருத்தமற்ற கொள்கையை, பொருத்தமற்ற நடைமுறைகளை, பொருத்தமற்ற ஆட்களை விலக்குவதற்குக் கிடைக்கும் மக்களுக்கான அரிய வாய்ப்பு என்பதைப் பற்றிக் கொஞ்சமும் சிந்திக்காதவர்களாகவே உள்ளனர்.

குறித்த கட்சியோ, வேட்பாளரோ கடந்த காலத்தில் ஆற்றிய பங்களிப்பு என்ன? சமகாலத்தில் அவர்கள் கொண்டிருக்கும் நிலைப்பாடும் தகுதியும் எப்படியுள்ளது என்பதையும் பரிசீலிப்பதில்லை. ஆக, தாங்கள் குறித்த கட்சிக்கும் (சின்னத்துக்கு) குறித்த வேட்பாளருக்கும் நிரந்தரமாக அடிமைச்சாசனம் எழுதப்பட்டவர்களாவே கருதிக் கொள்கிறார்கள்.

தாங்கள் பெற்றுக் கொண்ட அறிவையும் அனுபவத்தையும் வைத்துச் சிந்தித்து பரிசீலித்து முடிவெடுப்பதற்கோ, பொருத்தமான தரப்பைத் தேர்வு செய்வதற்கோ இவர்களால் முடிவதில்லை. எனவே இவர்கள் உண்மையில் ஜனநாயகத்தை மறுப்பவர்களாகவும் அதைத் துஸ்பிரயோகம் செய்வோராகவுமே உள்ளனர். எனவே இவர்கள் சமூக வளர்ச்சிக்குத் தடைக்கற்களாக இருக்கின்றனர். மட்டுமல்ல, சரியாகச் சிந்திப்போரின் ஆற்றலையும் தெரிவையும் கூட பாழாக்கி விடுகின்றனர்.

ஏனெனில் குறித்த கட்சியோ, அதன் பிரதிநிதியாக முன்னிறுத்தப்பட்டுள்ள வேட்பாளரோ, காலப் பொருத்தமற்ற நடைமுறைச் சாத்தியங்களற்ற கொள்கைப் பிரகடனத்தோடு வந்து முன்னே நிற்கும் போது அதைக் குறித்து கேள்விகளை எழுப்பாமல் இருப்பது எவ்வளவு தவறு? எவ்வளவு அறிவீலித்தனம்?


கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -





அதோடு கடந்த காலத்தில் உருப்படியாகச் செயற்படாமல் வெறுங்கையோடு வந்து நிற்கும் போது, அதை ஆதரிப்பது மன்னராட்சி, பிரபுத்துவக் கால அடிமை முறையன்றி வேறென்ன?

ஆகவே இவர்கள் இந்த நவீன யுகத்துக்குரிய ஜனநாயக அறிவார்ந்த அடிப்படைக்குரியவர்களில்லை. என்பதால் தான் இவர்களை ஜனநாயக விரோதிகள் என மதிப்பிட வேண்டியுள்ளது.

2. தாங்கள் விரும்புகின்ற வேட்பாளருக்கு வாக்களிப்பது அல்லது அவருக்கான விருப்பத்தை முதன்மைப் படுத்தி வாக்களிப்பது. இதுவும் ஜனநாயக விழுமியத்துக்கும் அறிவு சார் (20ம் பக்கம் பார்க்க)




Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2

# உங்கள் வாழ்க்கைக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையை இன்றே தேடிக்கொள்ள

# Friends Matrimony இல் பதிவு செய்யுங்கள்...

**BLACK FRIDAY**

**UP TO 40% OFF**

**REGISTER NOW**



## மணமகள்

## மணமகன்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| ID08120723 (F) | ID08120722 (F) | ID08120718 (F) | ID08120737 (M) | ID08120736 (M) | ID08120735 (M) |
| 41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , House of Nursing , Malaysia | 32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Nurse , Sri Lanka | 29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada | 28yrs, 5'8" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , Testing , Sri Lanka | 36yrs, 5'9" , Single , Aayilyam , N/A Sevai , High School , Train ambassador , Sri Lanka | 33yrs, 5'8" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Goverment.. , Sri Lanka |
| ID08120722 (F) | ID08120721 (F) | ID08120718 (F) | ID08120739 (M) | ID08120734 (M) | ID08120733 (M) |
| 32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Nurse , Sri Lanka | 23yrs, 5'2" , Single , Punarpoosam , N/A Sevai , Bachelors.. , Study , Sri Lanka | 29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada | 30yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineer , Sri Lanka | 36yrs, 5'7" , Annulled , Bharani , 5 Sevai , Masters Degree , Product manager , Sri Lanka | 27yrs, 5'7" , Single , Anusham , N/A Sevai , Bachelors.. , Research Technician , United States |
| ID08120711 (F) | ID08120695 (F) | ID08120685 (F) | ID08120731 (M) | ID08120730 (M) | ID08120720 (M) |
| 30yrs, 5'3" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , Executive , Sri Lanka | 28yrs, 5'4" , Single , Swaathi , 5 Sevai , Bachelors.. , Financial. , Canada | 22yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Student Canada | 33yrs, 6' , Single , Uthiram , N/A Sevai , Postgraduate.. , HDFC bank.. , Sri Lanka | 29yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineering , Sri Lanka | 35yrs, 5'5" , Single , Kettai , N/A Sevai , Masters Degree , Teacher , Sri Lanka |
| ID08120675 (F) | ID08120667 (F) | ID08120650 (F) | ID08120719 (M) | ID08120716 (M) | ID08120710 (M) |
| 29yrs, 5'4" , Single , Pooram , N/A Sevai , Bachelors.. , Student , Sri Lanka | 25yrs, 5'1" , Single , Thiruvaathirai , N/A Sevai , High School , Home , Sri Lanka | 26yrs, 4'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Law student ,Sri Lanka | 28yrs, 5'8" , Single , Kettai , 12 Sevai , Bachelors.. , Software Engineer , Sri Lanka | 18yrs, 4' , Divorced Not Specified , N/A Sevai , None , Hrhsehsh , Canada | 22yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Sri Lanka |

# ஆட்சி செய்யும் ஆற்றலை நிருபிக்க அநுராவுக்கு அவகாசம் தேவை!

தங்களது தவறான ஆட்சிமுறையின தும் பொருளாதார முகாமைத்துவத்தி னதும் விளைவாக தோன்றிய முன்னெ ன்றுமில்லாத பொருளாதார நெருக்கடி க்கு மத்தியில் மக்கள் கிளர்ச்சிக்கு முகங்கொடுக்க முடியாமல் ராஜபக்சாக் கள் இரு வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் தன்னந்தனியான உறுப்பினராக இருந்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவிடம் ஆட்சிப் பொறுப்பைக் கையளிக்க நிர்ப்பந்திக்கப்பட்டது வழமையான அரசியல் போக்கில் இரு ந்து ஒரு விலகலாகும். அவ்வாறு அடிக்கடி நடைபெறும் என்று எதிர் பார்க்க முடியாது.

ஆனால், இலங்கையின் பொருளாதார நெருக்கடி அண்மைய எதிர்காலத்தில் முடிவுக்கு வரப் போவதில்லை என்று நம்பும் முன்னாள் ஜனாதிபதி விக்கிரம சிங்க தேசிய மக்கள் சக்தியின் தலை வரான ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவும் கூட நாட்டை ஆட்சி செய்ய முடியாமல் போகும் பட்சத்தில் தன்னை மீண்டும் ஆட்சியை பொறு ப்பேற்குமாறு கேட்கக்கூடும் என்ற ஒரு மாயையில் இருக்கிறார் போன்று தெரிகிறது.

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பிறகு பதவியில் இருந்து இறங்கிய விக்கிரமசிங்க, புதிய ஜனாதிபதி திசா நாயக்கவுக்கு வாழ்த்துக்களைத் தெரி வித்தபோது, நாமிருவரும் அன்பாக நேசிக்கின்ற இலங்கை என்ற குழந் தையை உங்களிடம் ஒப்படைக்கி றேன். கடந்த இரு வருடங்களாக ஆபத்தான கயிற்றுப் பாலத்தின் மேலாக நீண்ட தூரம் இந்த குழந்தையை பாதுகாப்பாக தூக்கிக் கொண்டு வந்து வந்திருக்கிறேன். என்னையும் விட கூடுதலானளவு பாதுகாப்பாக குழந்தையை பாலத்தின் ஊடாக சுமந்து அடுத்த கரைக்கு கொண்டு போய்ச் சேர்ப்பீர்கள் என்று நம்பு கிறேன் என்று கூறினார்.

ஆனால், ஜனாதிபதி திசாநாயக்கவினால் அந்த குழந்தையை அடுத்த கரைக்கு பாதுகாப்பாக தூக்கிக் கொண்டு செல்ல முடியாமல் போகலாம் என்று ஒரு மாதத்துக்குள்ளாகவே முன்னாள் ஜனாதிபதி முடிவுக்கு வந்து விட்டார் போன்று தெரிகிறது.

பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடா விட்டாலும் விக்கிரமசிங்க தன்னை ஜனாதிபதி தேர்தலில் ஆதரித்த பல வேறு கட்சிகளைச் சேர்ந்த அரசியல் வாதிகள் ஒன்று சேர்ந்து அமைத்த புதிய ஜனநாயக முன்னணிக்காக தீவிரமாக பிரசாரத்தில் இறங்கியிரு க்கிறார். தேர்தல் தோல்விகளினால் துவண்டு போகாதவர் என்று பெயர் எடுத்த அவர் தனது நிருவாகத்தில் முக்கியமான பதவிகளை வகித்தவர்கள் பொருளாதார விவகாரங்களை கையா ளுவதற்கு அடுத்த பாராளுமன்றத்தில் இருக்க வேண்டியது அவசியம் என்று கூறிவருகிறார்.

அது மாத்திரமல்ல, நான்கு வருடங் களுக்கு பிறகு வெளிநாட்டு கடன் களை திருப்பிச் செலுத்தத் தொட ங்கும் போது அரச வருவாயை அதிகரிப்பதில் சமாளிக்க முடியாத சவாலை ஜனாதிபதி திசாநாயக்க எதிர் நோக்கப் போகிறார் என்று அபாய அறிவிப்பு செய்யும் முன்னாள் ஜனாதி பதி புதிய ஜனாதிபதி தனது முழு பதவிக் காலத்துக்கும் பதவியில் இருக்கக் கூடியதாக இருக்கும் என்று நம்புவதாகவும் குறிப்பிட்டார். திசா நாயக்க தனது பதவியில் ஐந்து வருடங்களுக்கு நீடிக்கமாட்டார் என்ற எண்ணம் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டிருப்பதனால் தான் அவ்வாறு கூறுகிறார் என்று தோன்றுகிறது.

ஆட்சிமுறை அனுபவம் இல்லாத தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் வேண்டுமானால் அரசாங்க நிருவாகம் மற்றும் பொருளாதார விவகாரங்களில் தன்னிடம் ஆலோசனைகளைப் பெற லாம் என்ற தோரணையில் விக்கிரம சிங்க அடிக்கடி கருத்துக்களை வெளியிடுகிறார்.

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கு தனது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய போது உகந்த நடைமுறைகள் கடைப் பிடிக்கப்படவில்லை என்று




புதிய பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்த கருத்துக்கு பதிலளித்த விக்கிரமசிங்க வேண்டுமானால் அவரு க்கு அரசியலமைப்பை கற்றுக் கொடு க்க தயாராக இருப்பதாகவும் கூறினார். ஆனால், 17 தடவைகள் மக்களினால் நிராகரிக்கப்பட்ட அவரிடமிருந்து ஒரு போதும் ஆலோசைகைளைப் பெறப் போவதில்லை என்று பிரதமர் அவமதிப்பாக பதிலளித்திருக்கிறார்.

அதேவேளை தன்னால் நாட்டை ஆட்சி செய்ய முடியாமல் போகும் என்று நினைத்தால் இரு வருடங்களில் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகி விடப் போவதாக திசாநாயக்க எங்கோ கூறியதாக வெளியான செய்திகளை சுட்டிக்காட்டும் ஐக்கிய தேசிய கட்சி அரசியல்வாதிகள், தேவை ஏற்படு மானால் அரசாங்கத்தை பொறுப்பேற்ப தற்கு பாராளுமன்றத்தில் அனுபவம் வாய்ந்தவர்கள் இருப்பது அவசியம் என்று கூறி தங்களுக்கு வாக்களிக்கு மாறு மக்களை கேட்கிறார்கள். தற்போதைய அரசாங்கம் பயணிக்கும் பாதையை நோக்கும் போது எதிர்க் கட்சியில் இருந்து நாளடைவில் அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடிய தாக இருக்கும் என்று விக்கிரமசிங்க வும் கடந்த வாரம் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கூறினார்.

தங்களுக்கு அமோகமாக வாக்களித்து அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆணையைத் தருமாறு தான் எதிர்க் கட்சிகள் தேர்தல் பிரசாரங்களில் மக்களை கேட்பது உலக வழமை. ஆனால் இலங்கையின் தற்போதைய எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் பலம் பொருந்திய எதிர்க்கட்சியாக செயற்படு வதற்கு தங்களை தெரிவு செய்யுமாறு கேட்கும் ஒரு விசித்திரமான போக்கை காண்கிறோம்.

விக்கிரமசிங்கவை மீண்டும் தீவிர அரசியலுக்கு கொண்டு வருவது குறித்து எந்த பேச்சுவார்த்தைகளும் இடம் பெறவில்லை என்றும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தொடர்ந்து ஆட்சியை நடத்த முடியாமல் போகும் பட்சத்தில் விக்கிரமசிங்கவின் சேவையை மக்கள் விரும்பக்கூடும் என்றும் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவரும் முன்னாள் ஜனாதிபதியின் நெருங்கிய உறவினருமான ருவான் விஜேவர்தன கடந்த வாரம் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கூறியிருந்தார். பொருளாதார முனை யில் பெரும் நெருக்கடியை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதிர்நோக்கு கிறது என்று குறிப்பிட்ட விஜேவர்தன நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்குமாறு விக்கிரம சிங்கவை மக்கள் கேட்கக்கூடும் என் றும் கூறினார்.

முன்னாள் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்னவும் பொருளாதார நெருக் கடி மீண்டும் ஏற்படுவதற்கான சாத்தி யம் இருப்பதால் மக்கள் விக்கிரம சிங்கவை நோக்கி திரும்பக் கூடும் என்று கடந்தவாரம் கொழும்பில் செய்தியாளர்கள் மாநாட்டில் கூறினார். புதிய ஜனநாயக முன்னணி கண்டியில் நடத்திய மக்கள் சந்திப்பு ஒன்றில் எழுதிவைத்துக் கொள்ளுங்கள் இன் னும் ஆறு மாதங்களில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வருவார் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரான அநுராத ஜெயரத்ன கூறினார்.

பொருளாதார நெருக்கடி ஏற்படும் போது எந்த அரசாங்கமும் பதவி விலகி ஆட்சிப் பொறுப்பை உடனடி யாகவே ஒப்படைக்கக்கூடிய ஒரு வராக இவர்கள் எல்லோரும் விக்கிரம சிங்கவை காட்சிப்படுத்தி தங்களுக்கு வாக்கு கேட்கும் புதுமையான ஒரு நிலைவரத்தை காண்கிறோம்.

புதிய பாராளுமன்றத்தில் விளையாட் டைக் காட்டுவதற்கு தங்களுக்கு நாற் பது ஆசனங்கள் மாத்திரமே தேவை என்றும் எதிர்க்கட்சி தலைவர் பதவியை பெற்றுக் கொண்டு தேவை ஏற்படுமேயானால் அரசாங்கத்தைப் பொறுப்பேற்பதே தங்களது நோக்கம் என்றும் புதிய ஜனநாயக முன்னணி யின் சில அரசியல்வாதிகள் தேர்தல் மேடைகளில் வெளிப்படையாகப் பேசுகிறார்கள்.

ராஜபக்சாக்கள் விக்கிரமசிங்கவிடம் ஆட்சிப் பொறுப்பை கையளித்த ஒரு அரிதான அரசியல் நிகழ்வை வைத் துக் கொண்டு மீண்டும் அவ்வாறு இடம்பெற முடியும் என்ற கற்பனை யில் தங்களது அரசியல் வியூகங்களை இந்த அரசியல்வாதிகள் அப்பாவித்தன மாக வகுக்கிறார்கள். தேசிய மக்கள் சக்தியினால் ஐந்து வருடங்களுக்கு முழுமையாக ஆட்சி செய்ய முடியாது என்ற தங்களது மனதுக்கு பிடித்த விருப்பத்தின் அடிப்படையில் மாத் திரம் இவர்கள் சிந்தனையை பறக்க விட்டிருக்கிறார்கள்.

பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களில் அதிகப் பெரும்பான்மையானவர்கள் அரசியலு க்கு புதியவர்கள் என்பதால் நாடு எதிர் நோக்கும் பாரதூரமான பொருளா தாரப் பிரச்சினையை கையாளுவதற்கு அனுபவமுடையவர்களை பாராளு

கட்டுரையாளர்:-
மூத்த ஊடகவியலாளர்
- வீ.தனபாலசிங்கம் -



மன்றத்துக்கு அனுப்புமாறு மக்களை கேட்கும் இந்த எதிரணி அரசியல் வாதிகள் கடந்த காலத்தில் தவறான முறையில் ஆட்சி நடத்திய ஜனாதி பதிகளுக்கு உறுதுணையாகச் செயற் பட்டவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

இவர்கள் புதியவர்களை பாராளுமன்ற த்துக்கு அனுப்ப வேண்டாம் என்று மக்களை கேட்கின்ற அதேவேளை ஜனாதிபதி திசாநாயக்கவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களும் பாராளுமன்றத்தை தங்களது கட்சியின் பிரதிநிதிகளினால் நிரப்புமாறு அறை கூவல் விடுக்கிறார்கள். பாராளுமன்றத் தில் எதிர்க்கட்சியே தேவையில்லை என்பது அவர்களது நிலைப்பாடாக இருக்கிறது. பாராளுமன்ற தேர்தலில் வாக்களிப்பு தினமான நவம்பர் 14 ஆம் திகதியை புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்காக பாராளுமன்ற த்தை துப்புரவு செய்யும் சிரமதான தினம் என்று ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் ஜனாதிபதி கூறுகிறார். எதிர்க்கட்சியே தேவையில்லை என்ற அவரின் கருத்து உண்மையில் ஜன நாயக விரோதமானது.

ஆனால் தேசிய மக்கள் சக்தி மிகப் பெரிய வெற்றியை பெறாமல் இருப் பதை உறுதி செய்யும் நோக்கில் திசா நாயக்கவின் ஒரு மாத கால நிருவாக த்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கடுமையான விமர்சனங்களை முன் வைக்கிறார்கள். அடுத்த பாராளுமன்ற த்தில் அவருக்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணையைக் கொண்டு வரப் போவதாக கூட உதய கம்மன்பில் கூறுகிறார். மூன்றில் இரண்டு பெரும் பான்மை பலத்தை தேசிய மக்கள் சக்திக்கு கொடுப்பது ஆபத்தானது என்று மக்களை அவர்கள் எச்சரிக் கிறார்கள்.

ஜனாதிபதி தேர்தலின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு பாராளு மன்ற தேர்தலின் முடிவுகள் எவ்வாறு அமையலாம் என்று மதிப்பிடு செய்யும் எதிரணி அரசியல்வாதிகள் தேசிய மக்கள் சக்தி அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றுவது சாத்திய மில்லை என்றும் ஒரு தொங்கு பாராளுமன்றமே தெரிவாகும் என்றும் கூறுகிறார்கள். அண்மையில் நடை பெற்ற எல்பிட்டிய பிரதேச சபை தேர்த லில் தேசிய மக்கள் சக்திக்கும் ஏனைய கட்சிகள் சகலதிற்கும் தலா 15 ஆசன ங்கள் கிடைக்கப் பெற்றதை தங்களது வாதத்திற்கு சான்றாக அவர்கள் முன் வைக்கிறார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் வழங்கிய வாக் குறுதிகளை நிறைவேற்றுவதற்கு பலம் பொருந்திய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒன்றை அமைக்க (22ம் பக்கம் பார்க்க)

# தேசியம் என்றால் என்ன என்று கேட்கும் ஒரு தேர்தல் களம்?

(15ம் பக்கத் தொடர்ச்சி) சுமந்திரன் பொது வேட்பாளரை ஒரு கேலிக்கூத்து என்று சொன்னார். கஜேந்திரன் இந்த முயற்சியில் நீங்கள் வென்றால் நாங்கள் இப்பொழுது வைத்திருக்கும் இரண்டு ஆசனங்களையும் இழந்து விடுவோம் என்பது எங்களுக்குத் தெரியும் என்று சொன்னார். முடியுமென்றால் ஒரு பொது வேட்பாளர் நிறுத்திக் காட்டுங்கள் என்று ரணில் சவால் விட்டார். பொது வேட்பாளர் முழுத் தீவுக்கும் பொதுவான நாசமாக முடியும் என்று சஜித் எச்சரித்தார். அது ஆண்டிகள் கூடிக் கட்டும் மடம் என்றும் ஆபத்தான விஷப் பரீட்சை என்றும் எழுதினார்கள்.

அதாவது தென்னிலங்கையில் உள்ள கட்சிகளும் பொது வேட்பாளரை ஆபத்தாகப் பார்த்தன. தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட பிரதான கட்சிகள் இரண்டு அதனை விரோதமாகப் பார்த்தன. தேசத் திரட்சிக்கு எதிரான ஊடகவியலாளர் சிலர் தெரிந்தோ தெரியாமலோ தமது சொந்த மக்களைத் தோற்கடிப்பதற்காக உழைத்தார்கள். ஆனாலும் பொது வேட்பாளர் அடிப்படை வெற்றியைப் பெற்றார். இலங்கையின் தேர்தல் வரலாற்றில் ஒரு தமிழ் அரசியல்வாதி பெற்ற ஆகப் பெரிய வாக்குகளை அவர் பெற்றார். கிழக்கில் இருந்து வந்த ஒரு வேட்பாளருக்கு வடக்கில் மட்டும் ஒரு லட்ஷத்து ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்தன. கடந்த 15 ஆண்டுகளிலும் கட்சிகளைக் கடந்து தேசத்தைத் திரட்டுவதற்கு எடுக்கப்பட்ட ஒரு முயற்சிக்குக் கிடைத்த அடிப்படை வெற்றி அது.

மக்கள் அமைப்புகளும் கட்சிகளும் இணைந்தால் அவ்வாறு வாக்குகளைத் திரட்ட முடியும் என்பது ஜனாதிபதி தேர்தலில் நிரூபிக்கப்பட்ட ஒரு உண்மை. கட்சிகளின் போதாமை காரணமாகத் தான் மக்கள் அமைப்பொன்று கட்சிகளோடு ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டி வந்தது. எனவே கட்சிகள் மட்டும் தேசத்தைத் திரட்ட முடியாது என்பது கடந்த ஜனாதிபதி தேர்தலில் நிரூபிக்கப்பட்ட ஒரு உண்மை.

இப்பொழுது மீண்டும் கட்சிகள் தேசத்தைத் திரட்டுவதில் எவ்வளவு தூரம் தோல்வியடைந்துள்ளன என்பதனை நிரூபிக்கும் ஆகப்பிந்திய உதாரணமாக நாடாளுமன்றத் தேர்தல் களம் காணப்படுகிறது. அதாவது தேசியம் என்றால் என்ன? தேசியவாத அரசியல் என்றால் என்ன? என்பதை ஆழமாக விளங்கிக் கொள்ளத் தவறிய கட்சிகளும் அரசியல்வாதிகளும் தமிழ் மக்களை மீண்டும் சிதறடிக்கும் ஒரு தேர்தல் களம் இது. எனினும், தமிழ்த் தேசிய அரங்கில் ஒரு கட்சி ஏகபோகத்தை மேலும் உடைத்துக் கொண்டு பல தரப்புக்கள் மேலெழுமாக இருந்தால் அதுவும் ஒருவிதத்தில் நன்மைக்கே.

# மாற்றத்துக்கான தேர்தல்:- நேர் நிலையும் எதிர் நிலையும்

(17ம் பக்கத் தொடர்ச்சி) நடத்தைக்கும் புறம்பான ஒன்றே. இதில் குறித்த வேட்பாளரின் உறவு வட்டம், சாதி, பிரதேசம், நட்பு, அவர் மீதான அபிமானம் போன்றவையே அதிகமாகக் காணப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் குறித்த வேட்பாளர் ஆற்றிய சேவைகளின் மீதான மதிப்பு நோக்கப்படுவதுண்டு. அது அபூர்வமானது.

அப்படித் தெரிவு செய்யப்பட்டால் பரவாயில்லை. ஆனால் அவ்வாறான ஆற்றலுடையவர், செயற்பாட்டுத் திறனைக் கொண்டவர், மக்களின் நலனில் அக்கறையுடையவர், பொறுப்புணர்ச்சியுள்ளவர், அரசியல் பண்புடையவர் பெரும்பாலும் நீடித்திருப்பது குறைவு. அவரிடம் என்ன தான் நற் கூறுகளிருந்தாலும் போதிய பொருளாதார பலமில்லாமல் போகும் போது பணபலத்தோடு கலந்திருக்கும் தேர்தற் களத்தில் அவர் வெற்றி வாய்ப்பைப் பெறுவது கடினமாகவே உள்ளது. மக்கள் அந்த நேரத்தில் கிடைக்கின்ற சொற்ப சலுகைகளுக்காக தவறானவர்களைத் தெரிவு செய்து, சரியானவர்களைத் தோற்கடித்து விடுகிறார்கள்.

எனவே இங்கும் பெரும்பாலும் தவறான தெரிவுகளுக்கே வாய்ப்பு கூடுதலாக இருக்கிறது. இங்கும் ஜனநாயக விழுமியமும் அது வழங்கும் நல் வாய்ப்பும் பாழடிக்கப்படுகிறது.

3.தேர்தற் காலத்தில் எந்தக் கட்சிக்கு அல்லது எந்த வேட்பாளருக்குச் சார்பான அலை பொதுவெளியில் மிதக்கிறதோ அந்தப் பக்கம் சாய்ந்து விடுவோர். இவர்களும் பொருத்தமான அரசியலையும் தெரிவுகளையும் தமது சொந்த அறிவினாலும் அனுபவத்தினாலும் தேர்வுக்குட்டுப்படுத்துவதில்லை.

சில போது குறித்த அலையானது நற் தேர்வுகளுக்கு வாய்ப்பளிக்கும். பல சந்தர்ப்பங்களிலும் பிழையான தெரிவுகளுக்கே வாய்ப்பை ஏற்படுத்துகிறது. உதாரணம், கடந்த 2020 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டபாய ராஜபக்ஸ தெரிவு செய்யப்பட்டமை இவ்வாறான ஒரு அலையினால் தான். ஆகவே இவர்களும் ஜனநாயக அடிப்படைக்கு எதிராக முரணாகவே செயற்படுகின்றனர். இப்படி ஜனநாயக அடிப்படைக்கு எதிராகச் செயற்படும் போது நாடும் ஏனைய மக்களும் பாதிப்பைச் சந்திக்க வேண்டியுள்ளது. (இவர்கள் பெரும்பாலும் தாம் இப்படிச் செயற்படுவது தவறானது என்றே தெரியாமல் தான் செய்கிறார்கள்) தவறான தெரிவுகளைச் செய்ய வேண்டியேற்படுகிறது.

4.கொள்கை என்ன? அதனுடைய நடைமுறைகள் எப்படியுள்ளன? அவற்றின் பெறுமானங்கள் எத்தகையன? அவற்றைச் செயற்படுத்த முன்வந்திருப்போரின் தகுதியும் ஆற்றலும் பொறுப்புத் தன்மையும் எவ்வாறானது? எனக் கவனித்து மதிப்பிட்டு வாக்களிப்போர் அல்லது தெரிவுகளைச் செய்வோர்.

இந்தத் தரப்பினரின் எண்ணிக்கை பல சந்தர்ப்பங்களிலும் குறைவாகவே உள்ளது. அதிலும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இப்படிச் சிந்திப்போரின் செல்வாக்கு சவாலான ஒன்றாகவே உள்ளது. அதனால் தான் மோசமான ஆட்சியாளர்களும் தவறான மக்கள் பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்படுகிறார்கள் அதிகாரத்தில் அமர்த்தப்படுகிறார்கள். ஆக, இங்கே அறிவார்ந்த தெரிவு தோற்கடிக்கப்படுகிறது. புறக்கணிப்புக்குள்ளாகிறது.


சரியான பொருத்தமான தெரிவுகளைச் செய்யக்கூடிய இவர்களுக்கான பொது வெளி மிகச் சுருங்கியதாகவே காணப்படுகிறது. mainstream media வில் இவர்களுடைய கருத்துகளுக்கும் நிலைப்பாட்டுக்குமான இடம் அளிக்கப்படுவது குறைவு. மாற்றுக் கருத்துகளுக்கான உரையாடல் வெளி விரிவடைந்து mainstream media வில் இது இடம்பெறும் போது தான் இவர்களுடைய தெரிவுக்கான அடிப்படைகள் விளக்கமடையக் கூடியதாக இருக்கும். அந்தப் பரப்பும் விரிவடையும். அது இப்போது குறைவு.

தற்போதுள்ள சூழலில், குறிப்பாகத் தமிழ்ப்பரப்பில் mainstream media வும் சமூக வலைத்தள வெளியும் மக்கள் அமைப்புகளும் புத்திஜீவிகளாகக் கருதப்படுவோரில் பலரும் மாணவர் அமைப்புகளும் சுய சிந்தனைக்கும் சொந்த அனுபவங்களுக்கும் உலக வரலாற்று அறிவுக்கும் மாறாகவே தவறாகவே இருப்பதைக் காணலாம்.

எனவே இவர்களுடைய தெரிவுகள் செல்வாக்கைச்செலுத்துவது குறைவு. அதனால் எதிர்த்தரப்பினர் தவறானோர் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புகளே அதிகமாக உண்டு. இதையே தற்போதைய தேர்தற் கணிப்புப் பற்றிய அடையாளமிடல்கள் நிரூபிக்கின்றன. ஆகவே நடக்கவுள்ள 17ஆவது தேர்த லில் நாட்டில் மாற்றம் நிகழ்ந்தாலும் வடக்குக் கிழக்கில் (தமிழ்ப்பரப்பில்) அந்த மாற்றத்தின் அளவு என்னவாக இருக்கும்? எப்படியானதாக இருக் கும்? என்ற கேள்வி எழுகிறது. அப்படியானால் தெற்கும் மேற்கும் (சிங்கள மக்கள்) தங்களைச் சுத்தப் படுத்துவதற்குத் தயாராகி விட்டது. வடக்கும் கிழக்கும் தான் பழைய குப்பைக் குழிக்குள்ளேயே தொடர்ந் தும் கிடக்கப் போகிறதா? என்ற இன்னொரு கேள்வியும் அருகிலே எழுந்து நிற்கிறது.

அரசியல் என்பது நடைமுறைப் பயன் விளைக்கும் அர்ப்பணிப்பான உழைப்பினாலும் உபாயங்களின் விளைவினாலும் உருவாகுவது. முதன்மையாக அரசியல் ஒரு சமூக விஞ்ஞானம். உணர்ச்சிகளுக்கு அதில் இடமில்லை. முற்று முழுவதும் அறிவுபூர்வமானது. ஆகவே தான் அதைக் கணிதம் என்று கூறப்படுவதுண்டு. கூடவே அரசியல் என்பது மக்களுடைய அதிகாரமாகும். கவனிக்க, மக்களுக்கான அதிகாரம் இல்லை.

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்

சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை

அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)

அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு

சைவக்குருக்களை

தொடர்பு கொள்ளவும்

"இணுவில் திருவூர்"

சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்

647.629.5468

msvkurukkal@gmail.com

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன்

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 16 நவம்பர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி புஸ்பராணி இராமச் சந்திரன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# NPP யாக JVP

- கருணாகரன் -

மாற்றத்துக்குரிய சக்தியாக தேசிய மக்கள் சக்தி (NPP)யை நம்புகின்ற வரவேற்கின்ற அளவுக்கு அதைக் குறித்த வலுவான சந்தேகங்களும் உண்டு. இதற்குக் காரணம், JVP யாகும். NPPக்குள் ஒலிக்கும் அல்லது NPP யை இடையிடு செய்யும் JVP யின் எதிர்மறையான குரல்கள் பல மானவையாகவே உள்ளன. அதுவே சந்தேகம் (நம்பிக்கையீனம்) அச்சம் ஆகியவற்றுக்குக் காரணமாகும்.

குறைந்த பட்சம் NPP முற்போக்கு முகத்தையும் முகாமையும் கொண்டுள்ளது. அதனுடைய இன்றைய கவர்ச்சியே இது தான். ஆனால், NPP யைக் கட்டுப்படுத்தக் கூடிய அல்லது அதை இடையீடு செய்யக்கூடிய நிலையிலுள்ள ஜே.விபியோ கடந்த காலத்தின் ஒளி மங்கிய பிரதேசத்திலேயே இன்னும் இருக்கப் பார்க்கிறது. இதற்கு அது தன்னுடைய அரசியல் உள்ளடக்கத்தில் கொண்டிருந்த இன வாதக் கூறுகளும் ஆயுதந் தாங்கிய அரசியற் பாரம்பரியமும் காரணமாக இருக்கக் கூடும்.

கைவிட முடியாத இந்தப் பலவீனங்களால் தான் JVPயாக அதனால் கடந்த ஐம்பது ஆண்டுகளாக முன்னிலையைப் பெறவும் முடியவில்லை. ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றவும் முடியவில்லை. NPPயாக தோற்றம் கொண்ட பின்பே அதற்கு ஒளி கூடியுள்ளது. அதுவே இப்பொழுது ஆட்சியைக் கைப்பற்றக் கூடிய சூழலை உருவாக்கியுள்ளது. இதனை JVP புரிந்து கொள்வது அவசியமாகும்.

ஜே.விபியின் 60 ஆண்டுகால முயற்சிக்கும் காத்திருப்புக்கும் ஒரு வாய்ப்பை JVP தோழர்களும் அதனுடைய ஆதரவாளர்களும் இப்போது பெறுகின்றனர். ஆனால், அது தனியே ஜே.விபியினால் மட்டும் சாத்தியமாக்கப்பட்ட வாய்ப்பு அல்ல. ஜே.விபியின் முதன்மைப் பங்களிப்பு உண்டு. அதை மறக்க முடியாது. ஆனால் அந்தப் பங்களிப்பு மட்டும் வாய்ப்பை அளிக்கவில்லை. அந்த வாய்ப்பை அளித்தது JVP- NPP யாக மாற்றமடைந்ததால் உருவாகியது.

இப்பொழுது வெளியரங்கில் அல்லது பொது அரங்கில் NPPக்கே செல்வாக்கும் அறிமுகமும் உண்டு. இன்றைய தலைமுறை அதிகம் அறிந்திருப்பதும் NPPயைத் தான். அதுவே வெற்றிக்கு அருகில் இருக்கிறது. வெற்றிகளைக் குவிக்கிறது. ஆனால் இதனை முழுதாக ஏற்றுக் கொள்வதற்கும் உணர்ந்து கொள்வதற்கும் JVP முயற்சிக்க வேண்டும். ஆனால் நடப்பதைப் பார்த்தால் இதையெல்லாம் உணர்ந்து கொள்வதற்கு JVP யினால் முழு அளவில் முடியவில்லை என்றே தெரிகிறது.

JVPயின் ஐம்பது ஆண்டு காலத் தாக்குப் பிடிப்பும் அதற்குள் அது இயக்கமாகவும் கட்சியாகவும் தன்னுடைய அரசியல் இருப்பைக் கொண்டிருந்ததும் JVPயினருக்கு ஒரு முன்னிலை உணர்வை அளிக்கிறது. ஐம்பது ஆண்டுகால அரசியல் சூறாவளிகளுக்குள் தாம் தாக்குப் பிடித்து நின்றிருக்கா விட்டால், இப்போது NPP யும் இல்லை. ஆட்சியுமில்லை என்றே அவர்கள் கருதுகிறார்கள். இது மறுக்க முடியாத உண்மை தான். ஆனால், அதே அளவுக்கு மறுக்க முடியாத உண்மை பழைய JVP யை அப்படியே மேடையேற்ற முடியாது என்பதுமாகும்.

ஆனால், என்ன தானிருந்தாலும் தாம் கொண்டிருந்த இலட்சியக் கனவுகளை இந்தச் சந்தர்ப்பத்தில் நிறைவேற்ற வேண்டும் என்று JVP யினர் எண்ணுகிறார்கள். இந்த மாதிரியான ஒரு உணர்நிலையும் உளவியற் சிக்கலும் அரசியல் இயக்கங்களில் பொதுவாக இருப்பதுண்டு.

அதிலும் ஆயுதம் தாங்கிப் போராடிய



இயக்கங்களின் உணர்ச்சிகரமான அணுகுமுறை (Emotional approach) மிகச் சிக்கலானது. அதுவே JVP க்குள்ளும் கிடந்து புரள்கிறது. ஆனால் காலமும் சூழலும் இதற்கப் பால் வேறு விதமான ஒரு யதார்த்த வெளியை உருவாக்கிக் கொள்ளும். அது கடந்த காலத்தின் அத்தனை விருப்பங்களுக்கும் கனவுகளுக்கும் இடமளிக்காது. தனக்குரிய தனக்கு வேண்டிய கனவுகளுக்கும் தேவைகளுக்குமே முதல் நிலையை அளிக்கும். ஆகவே இந்த யதார்த்தச் சூழலை விளங்கிக் கொண்டு செயற்படுவது மெய்யாகவே மாற்றத்தை விரும்புவோருக்கு அவசியமாகும். (இது தமிழ் அரசியலுக்கும் பொருந்தும். தமிழர்கள் இன்னும் போருக்குப் பிந்திய (Post – War Politics) பற்றிச் சிந்திக்க முடியாமலிருப்பது. அவர்கள் கடந்த காலத்தில் உறைந்து கிடப்பது தான். ஆகவே தான் வெற்றியை நோக்கிப் பயணிக்க முடியாதுள்ளது).

ஆனால், JVPயினரிடம் இந்தப் புரிதலைக் காண முடியவில்லை என்பது கவலைக்குரியது. என்பதால் தான் அவர்களால் இலங்கை ஒரு பல்லின தேசம், பன்மைத்துவச் சூழலுக்காக இடம் அளிக்கப்பட வேண்டும் என்பதையெல்லாம் உணர முடியாமலிருக்கிறது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விலக்க வேண்டும் என்று முற்போக்காகச் சிந்திக்க முடியாமலுள்ளது. இவ்வளவுக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலமும் அவசரகாலச் சட்டத்தின் மூலமும் தங்களுடைய முகமும் முள்ளந்தண்டும் சிதைக்கப்பட்ட அனுபவத்தைக் கொண்டவர்கள். இருந்தும் அதிகாரத்துக்கு வந்தவுடன் பழைய காயங்களும் வலிகளும் சட்டென மறந்து, அதிகார ருசி மட்டும் தலைக்குள் ஏறுகிறது.

மட்டுமல்ல, தமிழ்பேசும் மக்களுடைய அரசியல் உரிமைகளைப் பற்றி அக்கறை கொள்வதற்கு இன்னும் JVP க்குச் சிரமமாகத்தானிருக்கிறது. தமிழ் முஸ்லிம் பிரதேசங்களிலிருக்கும் (வடக்குக் கிழக்கில் மக்கள் மத்தியில் உள்ள) படைகளை விலக்குவதற்கு விருப்பமில்லாதுள்ளது. தென்னிலங்கையிலும் பிற இடங்களிலும் உள்ள ஏனைய எந்த அரசியல் தரப்புகளோடும் இடையீடுகளை நடத்துவதற்கு ஆர்வமில்லாதிருக்கிறது. பிற அரசியற் சக்திகள் எதையும் விட்டு வைப்பதற்கு, அதற்கான ஜனநாயக வெளியை அனுமதிப்பதற்கும் தயக்கமாகவுள்ளது. ஏன், NPP யுடன் கூட முழு அளவில் உடன்படவும் முடியாதுள்ளது. இதனை NPP க்குள் நிகழ்ந்து கொண்டிருக்கும் உட்கொதிப்புகள் காட்டுகின்றன.

அநுர குமார திசநாயக்க ஜனாதிபதியாகிய பிறகும் JVP யின் முக்கிய தலைவர்களான ரில்வின் சில்வா, லால் கந்த, விஜித ஹேரத், சுனில் கந்துநெத்தி போன்றோர் பழைய தொனியிலேயே கடுமையான அறிவிப்புகளை விடுக்கின்றனர். இது அநுர குமார திசநாயக்கவுக்கு நெருக்கடியைக் கொடுக்கும் என்று தெரிந்து தான் செய்கிறார்களா? அல்லது எந்தச் சூழலிலும் இனவாதத்தைக் கைவிடப் போவதில்லை. இலங்கையில் நீடித்த ஆட்சிப் பாரம்பரியத்தைக் கைவிடப் போவதில்லை என்பதை அழுத்தமாகச் சொல்கிறார்களா?

அப்படியென்றால் NPP யின் ஆட்சி எப்படி இருக்கும்? NPP கூறுகின்ற மாற்றம் எப்படியானது? என்ற கேள்விகள் எழுகின்றன. அந்தக் கேள்வி தான் இன்று பலரிடத்திலும் அச்சத்தை உண்டாக்குகிறது. அந்தக் கேள்விகள் தான் நடக்கப் போவது NPP யின் ஆட்சியா? அல்லது NPP யின் பேரில் நடத்தப்படும் JVP யின் ஆட்சியாக இருக்குமா? எனச் சந்தேகப்பட வைக்கிறது.

இதற்கான பதிலை NPP தெளிவாகச் சொல்ல வேண்டும். சொல்ல வேண்டும் என்பது, NPP தன்னுடைய நடைமுறைகளின் வழியாக அதைக் காட்ட வேண்டும்.

அரசியலில் சொல் என்பதையும் விட செயலே முக்கியமானது. சொல்வதை விடவும் செய்து காட்டுவது முக்கியமானது. மக்கள் செயலையே எதிர்பார்க்கிறார்கள். NPP தன்னைச் செயல்களால் நிரூபிக்க வேண்டும். செயலே விளைவுகளை உருவாக்குவது. 75 ஆண்டு கால ஆட்சித் தவறுகளையும் மக்களின் நீடித்த துயரையும் போக்குவதற்கான செயல்களாக அவை இருக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகான இரண்டு மாத ஆட்சிக் காலத்தில் NPP இன்னும் அப்படிச் செழிப்பான முன்னுதாரணங்கள் எதையும் காட்டி அரசியற் பெறுமானங்களாக்கவில்லை. நடந்திருப்பதெல்லாம் மேலோட்டமாக சில விடயங்களே. முழுமையான அளவில் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் பலமான பாராளுமன்ற அதிகாரம் வேணும். அதற்கான கால அவகாசம் வேண்டும் என்பதையெல்லாம் புரிந்து கொள்ள முடிகிறது.

இதற்குள்ளும் அநுர குமார திசநாயக்க ஒரு எதிர்பார்ப்பை நாடு முழுவதிலும் உருவாக்கியுள்ளார் என்பது உண்மையே. அது வளர்ந்து ஒரு செல்வாக்கு மண்டலத்தை உருவாக்கக் கூடிய ஏதுநிலைகள் இன்னும் ஏற்படவில்லை. அதனால் NPP யின் ஆதரவுத் தளம் எதிர்பார்க்கப்பட்டதையும் விடச் சற்று மெல்லியதாக உள்ளதாகத் தென்படுகிறது. இது சரியா இல்லையா என்பதை அடுத்த வாரம் நடக்கவுள்ள தேர்தல் தான் தெளிவாக உரைக்கும்.

ஆனால், நாற்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்து கடந்த தேர்தல் வரையில் நாடு முழுவதிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் செல்வாக்கு மண்டலங்கள் இருந்தன. இனவாதத்தை முழு அளவில் பிரயோகப்படுத்திய போது கூடச் சிறிய அளவிலேனும் வடக்குக் கிழக்கில் ஐ.தே.க வும் சு.கவும் செல்வாக்கைக் கொண்டிருந்தன. ஐ.தே.க வும் சு.க வும் இன்று சீரழிந்த பிறகு அவற்றின் மண்டலங்கள் இல்லாதொழிந்தது வேறு கதை.


NPP தன்னை விரிவாக்கி நிலைப்படுத்த வேண்டும். மெய்யாக அது மாற்றத்தை உருவாக்க வேண்டும் என விரும்பினால், அல்லது அதனுடைய சிந்தனையில் மாற்றத்தைக் குறித்த சித்திரங்கள் இருக்குமானால் அது அதற்குரிய அடிப்படைகளை உருவாக்க வேண்டும்.

புதிய எல்லைகளை நோக்கிப் பயணிக்க முற்படுவது அவசியம். பழைய — தூர்ந்து போக வேண்டிய சங்கதிகளை எடுத்து மேசையில் வைக்க முயற்சிக்கக் கூடாது. அனைத்துச் சமூகத்தினரையும் உள்வாங்குவதற்கான இடத்தை — பன்மைத்துவத்துக்குரிய அடிப்படைகளை — ஏற்படுத்துவதற்குத் தயாராக வேண்டும்.

ஆம், NPP மேலும் நெகிழ்ந்து, நவீனமாக வளர்ச்சியடைய வேண்டும். உணர்ச்சிகரமான உளக் கொந்தளிப்புகளுக்குப் பதிலாக உளப்பூர்வமான மகிழ்ச்சிச் சூழலை மலர்விக்க வேண்டும். அதற்கான அரசியற் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவது அவசியம். அதற்கான அர்ப்பணிப்பு கட்டாயமானது. காலம் அதையே எதிர்பார்க்கிறது. காலம் என்பது அரசியல் அர்த்தத்தில் வாழும் மக்களும் வாழ வேண்டிய மக்களுமேயாகும்.


## 28வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு முத்தர் இரத்தினம்




மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முத்தர் இரத்தினம் அவர்களது 28வது ஆண்டு நினைவு நாள் 11 நவம்பர் 2024 திங்கட்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் முத்தர் இரத்தினம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! இழுபறியாக இருந்த சில வேலைகள் சாதகமாக நடந்து முடியும். அரசாங்கம் தொடர்பான விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். மரியாதையும், அந்தஸ்தும் அதிகரிக்கும். கடினமான முயற்சிகள் கூட எளிமையாக செய்ய முடியும். தொழில் வியாபாரத்தில் வசூலாக வேண்டிய கடன் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சக ஊழியர்களுடன் இருந்த கருத்து வேற்றுமை குறையும்.





ரிஷபராசி அன்பர்களே! எதிலும் முன்னேற்றம் காணப்படும். அடுத்தவருக்கு எவ்வளவு நல்லது செய்தாலும் அது எடுபடாமல் போகலாம். அதே நேரத்தில் பொருள் வரத்து அதிகரிக்கும். வாகனம், பூமி மூலம் லாபம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். எதிர்பார்த்த லாபம் வரும். உத்யோகத்தில் செயல் திறமை வெளிப்படும். சுதந்திரமாக செயல்படும் வாய்ப்பு கிடைக்கும். நீண்ட நாட்களாக பணம் கைக்கு வந்து சேரும்.





மிதுனராசி அன்பர்களே! முயற்சிகள் வெற்றி பெறும். வேகத்தை குறைத்து விவேகமுடன் செயல்படுவது நன்மை தரும். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனத்துடன் வைப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்பட்டாலும் வந்து சேர்வதில் எந்த தடைகளும் இருக்காது. எந்த ஒரு வேலையையும் அதிக முயற்சி செய்து முடிக்க வேண்டி இருக்கும்.





கடகராசி அன்பர்களே! மற்றவர்கள் செய்கைகளால் மனவருத்தம் உண்டாகலாம். நீண்டநாள் இழுபறியாக இருந்து வந்த பிரச்சனை முடிவுக்கு வரும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த பின்தங்கிய நிலை மாறும். எதிர்பார்த்த ஆர்டர்கள் வந்து சேரும். வியாபார போட்டிகள் தடை தாமதங்கள் நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியமாக மேலதிகாரிகளின் பாராட்டுகளை பெறுவர். குடும்பத்தில் அமைதி குறைவது போல் தோன்றும்.





சிம்மராசி அன்பர்களே! சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். மனோதைரியம் கூடும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத தடங்கல்கள் வரலாம். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். உத்யோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணி புரிவார்கள். சிலருக்கு புதிய பதவி புதிய பொறுப்புகள் கிடைக்க பெறுவர். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும்.




கன்னிராசி அன்பர்களே! காரியங்களில் தாமதமான போக்கு காணப்படும். உங்கள் வார்த்தைக்கு வெளி வட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும். உங்கள் பேச்சு வெறும் பேச்சு போல் மற்றவர்கள் நினைப்பார்கள். அதனால் அளவுடன் பேசுவது நல்லது. வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர் கள் மேலதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது.





துலாம்ராசி அன்பர்களே! எல்லாவற்றிலும் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் இருந்த பிரச்சனை தீரும். நீண்ட நாளாக இருந்த கஷ்டம் நீங்கும். அரசாங்கம் மூலம் லாபம் ஏற்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் சாதகமாக இருக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் வாக்கு வன்மையால் புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். தடைபட்ட ஆர்டர்கள் வந்து சேரும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவர்.





விருச்சிகராசி அன்பர்களே! நீங்கள் ஆராய்ந்து செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். அடுத்தவர்களுக்கும் உதவ போய் வீண் பழி ஏற்படலாம் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். வியாபார ஸ்தலத்திற்காக புதியதாக இடம் வாங்குவீர்கள். மேலதிகாரிகளிடம் உங்களது கருத்துக்களை தெரிவிக்கும் போது கவனமாக பேசுவது நல்லது.







தனுசுராசி அன்பர்களே! மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். காரணமே இல்லாமல் வீண் பழி சுமக்க நேரிடும். ஒதுங்கி சென்றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம் கவனமாக இருப்பது நல்லது. கண் சம்பந்தமான கோளாறுகள் ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் போட்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலை செய்யும் இடத்திலும். மேலதிகாரிகளிடமும் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது.




மகரராசி அன்பர்களே! தடைப்பட்டு வந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும். பணியாட்கள் மூலம் நன்மை ஏற்படும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் நன்மதிப்பை பெறுவீர்கள். உத்யோகத்தில் சிறப்பாக பணிகளை செய்து மேலதிகாரிகளிடம் பாராட்டு கிடைக்கப் பெறுவர்.




கும்பராசி அன்பர்களே! எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். புத்திசாதுரியத்தால் எதையும் செய்து முடிக்க முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. அடுத்தவரின் உதவி கிடைக்கும்.




மீனராசி அன்பர்களே! காரியத் தடை தாமதம் நீங்கும். இருப்பதால் எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். வீண் கவலை விலகும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். தொழில் வியாபாரத்தில் பங்காளியை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் எதை பற்றியும் கவலைப்படாமல் செயலாற்றுவார்கள். மேலதிகாரிகளுடன் இணக்கமான சூழ்நிலை நிலவும். இறை வழிபாடு நன்மை தரும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# ஆட்சி செய்யும் ஆற்றலை நிருபிக்க அநுராவுக்கு அவகாசம் தேவை!

(19ம் பக்கத் தொடர்ச்சி) ஆணை தருமாறு ஜனாதிபதி திசாநாயக்க மக்களை கேட்கிறார். ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறும் கட்சிக்கே பாராளுமன்ற தேர்தலில் மக்கள் பெருமளவில் ஆதரவை வழங்குவதே இது கால வரையான அரசியல் போக்காக இருந்து வந்திருக்கிறது.

இந்த தடவையும் அதுவும் குறிப்பாக பழைய பிரதான அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களை நிராகரித்து திசாநாயக்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்த மக்கள் அந்த போக்கில் இருந்து மாறுபடுவதற்கு வாய்ப்பில்லை. என்றே தோன்றுகிறது. புதிய ஜனாதிபதி தனது நிலையை வலுப்படுத்தி ஆட்சியை தொடருவதற்கு மக்கள் வாய்ப்பைக் கொடுப்பார்கள் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

ஆனால் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் திசாநாயக்கவின் அரசாங்கம் நின்று பிடிக்கக்கூடிய வாய்ப்பு இல்லை என்று அபாயச்சங்கு ஊதிக் கொண்டிருக்கிறார்கள். அவர் தற்போது அமைத்திருப்பது மூன்று அமைச்சர்களைக் கொண்ட ஒரு இடைக்கால அல்லது காபந்து அரசாங்கமேயாகும். அதுவே உலகில் மிகவும் சிறிய அமைச்சரவையாகும். அவரைப் போன்று பதவிக்கு வந்த ஒரு மாதகாலத்திற்குள் பெருமளவுக்கு எதிர்மறையான விமர்சனங்களுக்கும் அரசியல் நெருக்குதல்களுக்கும் முகங் கொடுத்த அனுபவம் வேறு எந்த முன்னாள் ஜனாதிபதிக்கும் ஏற்பட்டதில்லை.

பொருட்களை பெறுவதற்கு மக்கள் நீண்ட வரிசைகளில் காத்துநிற்கும் யுகம் மீண்டும் விரைவில் தோன்றப் போகிறது என்றும் இஸ்ரேலியர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்துவதற்கு தீட்டப்பட்டதாக கூறப்படும் திட்டம் காரணமாக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்படப் போகிறது என்றும் பூச்சாண்டி காட்டும் வேலைகளில் எதிர்க்கட்சிகள் இறங்கியிருக்கின்றன.

தனது அரசாங்கம் பலவீனமானதாக இருப்பதாக முன் வைக்கப்படும் விமர்சனங்களுக்கு தேர்தல் பிரசாரங்களில் பதிலளிக்கும் ஜனாதிபதி திசாநாயக்க ஒரு சில நிறுவனங்களில் மாத்திரமே தாங்கள் இதுவரையில் அதிகாரத்தை உறுதிப் படுத்தியிருப்பதாக கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி பதவி, அமைச்சரவை, பாராளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைப்புகள் போன்ற பல்வேறு நிறுவனங்களில் உறுதியான அதிகாரம் உறுதிப்படுத்தப்படும் போது தான் அரசியல் அதிகாரம் நிலை நிறுத்தப்படும். தற்போது ஜனாதிபதியுடன் மிகவும் சிறிய அமைச்சரவையே இருக்கிறது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கிறது. மாகாணசபைகள் பல வருடங்களாக இயங்கவில்லை. நாம் பதவிக்கு வந்து ஒரு மாதத்துக்கும் சற்று கூடுதலான காலமே கடந்திருக்கிறது. சில ஊடக நிறுவனங்களும் அரசியல்வாதிகளும் எம்மிடம் பலம் பொருந்திய அரசியல் அதிகாரம் இல்லாத நிலையில் நாட்டில் உறுதிப்பாடின்மையை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கிறார்கள் என்று அவர் குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

ஜனாதிபதியையும் தேசிய மக்கள் சக்தியையும் தாக்குவதற்கு பொருளாதாரப் நெருக்கடி, விலைவாசி உயர்வு, அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணை அறிக்கைகள், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குதல் போன்ற பல வேறு பிரச்சினைகளை எதிர்க்கட்சிகள் பயன்படுத்துகின்றன.

ஆனால், இந்த பிரச்சினைகள் உருவாகுவதற்கு தேசிய மக்கள் சக்தி அல்ல ஜனாதிபதியை குற்றஞ் சாட்டுகிறவர்களே பெருமளவுக்கு பொறுப்பாக இருந்திருக்கிறார்கள்.

புதிய ஜனாதிபதி தனது நிலையை வலுப்படுத்தி அதிகாரத்தில் ஒழுங்காக அமருவதற்கு முன்னதாகவே அவருக்கு எதிராக தீவிரப்படுத்தப்படும் பிரசாரங்கள் சாமானியன் ஒருவன் ஆட்சியதிகாரத்துக்கு வந்திருப்பதை பழைய அரசியல் அதிகார வர்க்கத்தினால் ஜீரணிக்க முடியவில்லை என்பதை பிரகாசமாக வெளிக்காட்டுகிறது. ஆட்சி முறை அனுபவக் குறைவு பற்றிய விமர்சனங்கள் எல்லாம் இதன் பிரதிபலிப்பேயாகும்.

தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, அதிகாரப்பரவலாக்கம் உட்பட பல்வேறு பிரச்சினைகளில் தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடுகள் தொடர்பில் கடுமையான விமர்சனங்கள் இருக்கின்றன. ஆனால், பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு அந்த கட்சி உறுதியான ஒரு அரசாங்கத்தை அமைக்க அனுமதித்து திசாநாயக்கவின் தலைமையில் அது நாட்டை நிருவகிப்பதற்கு ஒரு கணிசமான கால அவகாசத்தை வழங்க வேண்டியது அவசியமாகும். அதற்கு பிறகு அவர்களது ஆட்சி பற்றிய விமர்சனங்களை செய்வதே முறையானதாகும்.

பாரம்பரியமான அரசியல் அதிகார வர்க்கத்துக்கு சேவை செய்த பழைய அரசு இயந்திரத்தை வைத்துக் கொண்டு முறைமை மாற்றத்தை அல்லது ஊழலற்ற நிருவாகத்தை நடத்துவதில் உள்ள அடிப்படைச் சிக்கல்களை குறுகிய காலத்திற்குள் ஜனாதிபதி திசாநாயக்க நன்றாக விளங்கிக் கொண்டிருப்பார். எது எவ்வாறிருந்தாலும், நடைமுறைச் சாத்தியமற்ற பெருவாரியான வாக்குறுதிகளை வழங்கிய அவர் அதன் விளைவான நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்கவேண்டியே இருக்கும் என்பது நிச்சயம். பாராளுமன்றத்தில் ஒரு கணிசமான ஆசனங்களைப் பெற்று அவருக்கு நெருக்குதல்களை கொடுத்து ஆட்சி செய்யவிடாமல் குழப்பியடிப்பதற்கே எதிர்க்கட்சிகள் நோக்கம் கொண்டிருக்கின்றன என்பதை அவற்றின் தற்போதைய அணுகுமுறைகள் தெளிவாக வெளிக்காட்டுகின்றன.

## 14வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு இரத்தினம் தம்பிமுத்து



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்.திருநெல்வேலியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினம் தம்பிமுத்து அவர் களது 14வது ஆண்டு நினைவுநாள் 31 ஒக்டோபர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இரத்தினம் தம்பிமுத்து அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

*• Vistation*
*• Funeral & Memorial Service*
*• Reception*
*• Burial • Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு வாங்க.. விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*

நாளைய பற்றிய கவலையை தவிர்க்க நம்பிக்கையானது
காப்புறுதி ஒன்றே!
• Life Insurance
• Critical Illness Insurance
• Disability Insurance
• Mortgage Insurance
• Super Visa Insurance
• RESP, RRSP and TFSA
Arun KULASINGAM
Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca
iA Financial Group
Canada Protection Plan
Assumption Life
Foresters
KABIS

BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
உங்கள் சகல City Permit தேவைகளுக்கு
Kathir
416 856 6900
Subramaniam Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email:kathirhomes@gmail.com

# பொதுத்தேர்தல் 2024:- மாவட்ட ரீதியான வாக்குப் பதிவு விபரங்கள்

இலங்கையின் 10ஆவது நாடாளுமன்றத்திற்கான உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் 14 நவம்பர் 2024 வியாழக்கிழமை இடம் பெற்றுள் ளது. அதற்கமைய, காலை 7.00மணிக்கு ஆரம்ப மான வாக்களிப்பு நடவடிக்கைகள் மாலை 4.00 மணி வரை இடம்பெற்றது.

22 தேர்தல் மாவட்டங்களில், கம்பஹா மாவட்டம் அதிக வாக்காளர்களைக் கொண்ட மாவட்டமாக காணப்படுவதுடன் அந்த மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 18 லட்சத்து 81,129 பேர் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் 65 வீத வாக்குகளும் களுத்துறையில் 45 வீத வாக்குகளும் நுவரெலியாவில் 68 வீத வாக்குகளும்

யாழ்ப்பாணத்தில் 50 வீத வாக்குகளும் கிளிநொச்சி யில் 46 வீத வாக்குகளும் முல்லைத்தீவில் 50 வீத வாக்குகளும் வவுனியாவில் 25 வீத வாக்குகளும் மன்னாரில் 55 வீத வாக்குகளும் மட்டக்களப்பில் 61 வீத வாக்குகளும் திருகோணமலையில் 51 வீத வாக்குகளும் பதிவாகி உள்ளன. அம்பாறையில் 37 வீத வாக்குகளும்

கண்டியில் 50 வீத வாக்குகளும் பதுளையில் 67 வீத வாக்குகளும் காலியில் 50 வீத வாக்குகளும் இரத்தினபுரியில் 65 வீத வாக்குகளும்

திகாமடுல்லயில் 42 வீத வாக்குகளும் பொல நறுவையில் 65 வாக்குகளும் ஹம்பாந்தோட்டை யில் 60 வீத வாக்குகளும் மொனராகலையில் 61 வீத வாக்குகளும் குருணாகலில் 64 வீத வாக்கு களும் மாத்தளையில் 55 வீத வாக்குகளும் மாத்



தறையில் 64 வீத வாக்குகளும் புத்தளத்தில் 64 வீத வாக்குகளும் கேகாலையில் 64 வீத வாக்குகளும் அனுராதபுரத்தில் 65 வீத வாக்குகளும் கம்பஹாவில் 52 வீத வாக்குகளும்

கொழும்பு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 17 இலட்சத்து 65,351 ஆகும். வன்னி தேர்தல் மாவட்டத்தில் குறைந்தளவான வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டு ள்ளதுடன் அந்த எண்ணிக்கை மூன்று இலட்ச த்து 6,081 ஆகும்.

பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பில் மக்கள் ஆர்வ மாக வாக்களித்ததாக எமது பிராந்திய செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க தம்பனை வேடுவ சமூகத்தின் பிரதிதலைவரும் குடும்பத்தினரும் வாக்களிப்பு நிலையத்திற்கு கோடரியுடன் வந்ததால் திருப்பி அனுப்பப்பட்டனர். தம்பனையில் உள்ள வேடுவ சமூகத்தின் பிரதிதலைவர் கன்பன்டிய எத்தோவும் அவரது குடும்பத்தினரும் தேர்தல்வாக்களிப்பு நிலையத்திற்குள் கோடரியுடன் நுழைந்துள்ளனர். எனினும் அவரது தோளில் கோடரியை அவதானித்த அதிகாரிகள் அவருக்கு அனுமதி மறுத்துள்ளனர்..

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள தம்பனை வேடுவ சமூகத்தின் பிரதிதலைவர் வேடுவ சமூகத்தின் கலாச்சாரம் மற்றும் உரிமைகள் பற்றி அறியாத அதிகாரிகளை அரசாங்கம் தம்பனையில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தக்கூடாது என வேண்டுகோள் விடுத்துள்ளார். வெளிநாடுகளிற்கும் நீதிமன்றங்களிற்கும் கோடாரியுடன் செல்வதற்கு எங்களிற்கு அனுமதி வழங்கியுள்ளனர் வாக்களிப்பு நிலையங்களிற்குள் செல்வதற்கு எந்த தடையும் இருக்ககூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025
விபரங்களுக்கு:- 416 841 9600

வானிலை கணிக்கக்கூடியது ஆனால்
உங்கள் எதிர்காலம் அப்படியல்ல
எங்கள் நோக்கம் உங்கள்
எதிர்காலத்தை பாதுகாப்பது
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
LIFE INSURANCE | CRITICAL ILLNESS | DISABILITY INSURANCE
NON-MEDICAL INSURANCE | SUPER VISAS | RRSP & RESP
WE TRULY CARE FOR YOU & YOUR LOVED ONES!
647 401 5800 ajithinsurance.ca ajithsaba@gmail.com
10 Thornmount Dr, Scarborough, Ontario M1B 3J4

# பாராளுமன்றத் தேர்தலில் 141 ஆசனங்களைக் கைப்பற்றிய அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி! இலங்கை அரசியலில் பாரிய திருப்பம்!



நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் அபார வெற்றி பெற்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அகில இலங்கை ரீதியில் 141 ஆசனங் களை கைப்பற்றியுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக சஜித் பிரேம தாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அகில இலங்கை ரீதியில் 35 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது.

காலி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 406,428 வாக்குகளை பெற்று 7 ஆசனங் களையும் ஐக்கிய மக்கள் சக்தி 93,486 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 31,201 வாக்குகளை பெற்று 1 ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் இறுதித் தேர்தல் முடிவுகளின் பிரகாரம், தேசிய மக்கள் சக்தி 234,083 வாக்கு களை பெற்று, 5 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 52,170 வாக்கு களுடன் ஒரு ஆசனத்தையும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 26,268 வாக்கு களை கைப்பற்றி ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளது.

பொலன்னறுவை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 159,010 வாக்குகளை பெற்று, 4 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 43,822 வாக்குகளை கைப்பற்றி ஒரு ஆசனத்தையும் கைப் பற்றியுள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 317,541 வாக்குகளை கைபற்றி 6 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 74,475 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் கைப் பற்றியுள்ளது.

மொனராகலை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 174,730 வாக்குகளை பெற்று 5 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 62,014 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் பெற்றுள் ளது.

பதுளை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 275,180 வாக்குகளை கைப்பற்றி 6 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 102,958 வாக்குகளை பெற்று 2 ஆசனங்களையும் புதிய ஜனநாயக முன்னணி 36,450 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள் ளது.

திருகோணமலை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 87,031 வாக்கு களை பெற்று 2 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 53,058 வாக்கு களை பெற்று ஒரு ஆசனத்தையும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 34,168 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தை யும் கைப்பற்றியுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 181,678 வாக்குகளை பெற்று 4 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 53,200 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் கைப் பற்றியுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 161,167 வாக்குகளை பெற்று 5 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 101,589 வாக்குகளை பெற்று 2 ஆசனங்களையும், ஐக்கிய தேசிய கட்சி 64,672 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் கைப் பற்றியுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 452,398 வாக்குகளை கைப்பற்றி 8 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 128,932 வாக்குகளை பெற்று 2 ஆசனங்களையும், புதிய ஜனநாயக முன்னணி 34,257 வாக்கு களை பெற்று ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளது.

அநுராதபுரத்தில் தேசிய மக்கள் சக்தி 331,692 வாக்குகளை பெற்று 7 ஆசனங்களை கைப்பற்றியுள்ளதோடு ஐக்கிய மக்கள் சக்தி 98,176 வாக்கு களை பெற்று 2 ஆசனங்களை கைப் பற்றியுள்ளது.

வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 39,894 வாக்குகளை பெற்று 2 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 32,232 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 29,711 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி 21,101 வாக்கு களை பெற்று ஒரு ஆசனத்தையும் இலங்கை தொழிலாளர் கட்சி 17,710 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தை யும் கைப்பற்றியுள்ளது.

குருணாகல் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 651,476 வாக்குகளை பெற்று 12 ஆசனங்களை கைப்பற்றி யுள்ளதோடு ஐக்கிய மக்கள் சக்தி 189,394 வாக்குகளை பெற்று 3 ஆசன ங்களை கைப்பற்றியுள்ளது.

கேகாலை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 312,441 வாக்குகளை பெற்று 7 ஆசனங்களை கைப்பற்றி யுள்ளதோடு ஐக்கிய மக்கள் சக்தி 109,691 வாக்குகளை பெற்று 2 ஆசன ங்களை கைப்பற்றியுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 368,229 வாக்குகளை பெற்று 8 ஆசனங்களை கைப்பற்றி யுள்ளதோடு ஐக்கிய மக்கள் சக்தி 133,041 வாக்குகளை பெற்று 3 ஆசன ங்களையும் பெற்றுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 80,830 வாக்குகளை பெற்று 3 ஆசனங்களை கைப்பற்றியுள்ளதோடு, இலங்கை தமிழ் அரசுக் கட்சி 63,327 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத் தையும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 27,986 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் இல.17 சுயேட் சைக் குழு 27,855 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள் ளது.

புத்தளத்தில் தேசிய மக்கள் சக்தி 239,576 வாக்குகளை பெற்று 6 ஆசனங்களை கைப்பற்றியுள்ளதோடு ஐக்கிய மக்கள் சக்தி 65,679 வாக்கு களை பெற்று 2 ஆசனங்களை பெற்று ள்ளது.

கண்டி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 500,596 வாக்குகளை பெற்று 9 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 145,939 வாக்குகளை பெற்று 2 ஆசன ங்களையும் புதிய ஜனநாயக முன்னணி 50,889 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 96,975 வாக்கு களை பெற்று 3 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 55,498 வாக்கு களை பெற்று ஒரு ஆசனத்தையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 40,139 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தை யும் கைப்பற்றியுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 898,759 வாக்குகளை பெற்று 16 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 150,445 வாக்குகளை பெற்று 3 ஆசனங்களையும் பெற்றுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 788,636 வாக்குகளை பெற்று 14 ஆசனங்களை கைப்பற்றி யுள்ளதோடு, ஐக்கிய மக்கள் சக்தி 208,249 வாக்குகளை பெற்று 4 ஆசன ங்களை பெற்றுள்ளது.

திகாமடுல்ல மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 146,313 வாக்குகளை பெற்று 4 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 46,899 வாக்கு களை பெற்று ஒரு ஆசனத்தையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 33,911 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் இலங்கை தமிழ் அரசு கட்சி 33,632 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளது.

## 30 வருடங்களின் பின்னர் படுதோல்வியடைந்த டக்ளஸ் தேவானந்தா



ஈபிடிபியின் செயலாளர் நாயகமும் முன்னாள் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் தனது 30 வருட அரசியல் வாழ்க்கையில் படு தோல்வியடைந்துள்ளார்.

கடந்த 30 வருடங்களில் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சி புரிந்த அரசாங்கங்களுடன் இணைந்து பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகி த்து வந்தார். கடந்த ரணில் தலை மையிலான அரசாங்கத்திலும் கடற்றொ ழில் அமைச்சராக பதவி வகித்தார். அத்துடன் வன்னி தேர்தல் தொகுதி யிலும் திலீபன் என்பவர் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டி ருந்தார்.

இம்முறை கொழும்பில் இரண்டு பிக்கு கள் மற்றும் இந்து மதகுரு உட்பட பலரை தேர்தலில் களமிறக்கியிருந்தார். இவ்வாறு பல்வேறு முயற்சிகளை அவர் எடுத்த போதிலும் படுதோல்வியடை ந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.மாவட்டத்தில் வென்றவர்கள் யார்?



யாழ். மாவட்டத்தின் விருப்பு வாக்கு முடிவுகள் வெளியாகியுள்ளன. அதற் கமைய் தேசிய மக்கள் சக்தி சார்பாக கருணநாதன் இளங்குமரன் 32,102

ஷண்முகநாதன் ஸ்ரீ பவானந்தராஜா 20,430

ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் 17,579

இலங்கை தமிழரசு கட்சி சார்பாக சிவ ஞானம் ஸ்ரீதரன் 32,833 அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 15135 சுயேட்சைக் குழு 17 சார்பாக இராம நாதன் அர்ஜுனா 20, 487 ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

# தோல்வியடைந்த முன்னாள் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள்

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் முன்னாள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தங்களுடைய ஆசனங்களை இழந்துள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் தோல்வியடைந்துள்ளார். அதேபோல் புளொட் இயக்கத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் யாழ்.மாவட்டத்தில் தோல்வியடைந்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற அங்கஜன் ராமநாதன் தோல்வியடைந்தார்.

கடந்த முறை தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு தெரிவாகி இருந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தோல்வியடைந்துள்ளார்.

ஈபிடிபியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா இம்முறை பொதுத் தேர்தலில் தோல்வியுற்றதுடன், முதன் முறையாக அவர் தோல்வியை தழுவியுள்ளார்.

அதேபோல் வன்னி மாவட்டத்தில் கடந்த தடவை ஈபிடிபி சார்பாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான குலசிங்கம் திலீபன் இம்முறை தேர்தலில் தோல்வியுற்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பாகக் கடந்த தடவை நாடாளுமன்றத்துக்குத் தெரிவான பிள்ளையான் என அறியப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் இம்முறை தேர்தலில் தோல்வியுற்றார்.

அத்துடன் தமிழரசுக் கட்சியில் போட்டியிட்டுக் கடந்த முறை நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகி இம்முறை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் மட்டக்களப்பில் போட்டியிட்ட கோவிந்தம் கருணா கரன் தோல்வியுற்றார்.

பதுளை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் கடந்த முறை பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அருணாச்சலம் அரவிந்த்குமார் மற்றும் வடிவேல் சுரேஷ் ஆகியோர் இம்முறை தேர்தலில் தோல்வியடைந்தனர்.

# வன்னியில் பாராளுமன்றுக்குத் தெரிவானவர்கள் விபரங்கள் இதோ



வன்னித் தேர்தல் தொகுதியில் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியவர்களில் அதிகூடிய விருப்பு வாக்குளை ரிசாத் பதியுதீன் அவர்களும், குறைந்த விருப்பு வாக்குகளை செல்வம் அடைக்கலநாதன் அவர்களும் பெற்றுள்ளனர்.


நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட ரிசாத் பதியுதீன் அதிக பட்சமாக 21.018 விருப்பு வாக்குளைப் பெற்றுள்ளார்.

குறைந்த விருப்பு வாக்காக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியில் போட்டியிட்ட செல்வம் அடைக்கலநாதன் 5.695 விருப்பு வாக்குளைப் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளார்.

மேலும், இலங்கை தொழிலாளர் கட்சியில் காதர் மஸ்தான் 13.511 விருப்பு வாக்குகளையும், இலங்கை தமிழரசுக் கட்சியில் து.ரவிகரன் 11.215 விருப்பு வாக்குகளையும், தேசிய மக்கள் சக்தியில் செ.திலகநாதன் 10.652 விரும்பு வாக்குகளையும், ஜெகதீஸ்வரன் 9.280 விருப்பு வாக்குகளையும் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

# முதல் தடவையாக 2 மலையகத் தமிழ்பெண்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு!





மலையக அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக மலையக சமூகத்தைச் சேர்ந்த இரு பெண்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர். தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளரான கலைச்செல்வி 33.346 விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ள அதே வேளை பதுளை மாவட்டத்தின் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அம்பிகா சாமுவேல் 58.201 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

1977 ஆம் ஆண்டு முதலாவது மலையக பிரதிநிதித்துவத்தைப் பெற்ற மலையக சமூகம் கடந்த 47 வருடங்களில் பெற்ற முதலாவது பெண் பிரதிநிதித்துவம் இது என்பது முக்கிய விடயம்.

# இனம் - மதம் - மொழி என வாக்காளரை சிறையில் அடைத்த எல்லைக்குள் கட்டுப்படாத தேர்தல் வாக்களிப்பு

2024 நாடாளுமன்ற தேர்தல் வாக்களிப்பை இனம் மதம் மொழி என வாக்காளரை சிறையில் அடைத்த எல்லைக்குள் கட்டுப்படாத வாக்களிப்பு என வர்ணித்துள்ள கிரிக்கெட் வர்ணணையாளர் ரொசான் அபயசிங்க நகரங்கள் கிராமங்கள் மாவட்டங்கள் மாகாணங்கள் அனைத்தும் ஒரே குரலில் பேசியுள்ளன என குறிப்பிட்டுள்ளார்

சமூக ஊடக பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது 2019இல் அப்போதைய அரசாங்கத்தின் வெற்றி



மிகப்பெரியது என பாராட்டப்பட்டது. ஆனால் அந்த வெற்றியில் ஒரு முக்கியமான விடயமிருந்தது. அதாவது மக்கள் வாக்களித்த விதத்தில்.

வடக்கும் கிழக்கும் மலையகமும் தொடர்ந்தும் அரசாங்கத்திற்கு எதிராக வாக்களித்திருந்தன. அதன் மூலம் அவர்கள் தென்பகுதி தலைமைத்துவத்தை நம்பவில்லை என் பதை மீண்டும் வெளிப்படுத்தினார்கள்.

2024 தேர்தல் முடிவு மகத்தானது மாத்திரமில்லை இது ஒரு சுனாமி. மேலும் வாக்களிப்பு இடம் பெற்ற விதம் தான் இதற்கு மகுடம் போல காணப்படுகின்றது.

இனம் மதம் என வாக்காளரை சிறையில் அடைத்த எல்லைக்குள் கட்டுப்படாத வாக்களிப்பு இது. நகரங்கள் கிராமங்கள் மாவட்டங்கள் மாகாணங்கள் அனைத்தும் ஒரே குரலில் பேசியுள்ளன. இது இயற்கையாகவே நாட்டிற்கு சிறந்த விடயம்.

இலங்கை அதன் அரசியல் அத்தியாயத்தில் ஒரு புதிய பக்கத்திற்குள் நுழைகின்றது. உறுதியளிக்கப்பட்ட மாற்றத்திற்காக காத்திருக்கின்றது.

# இனவாதத்தைப் புறந்தள்ளி - பொய்ப் பிரச்சாரத்தில் ஏமாறாத வடமாகாண மக்களுக்கு நன்றி கூறும் டில்வின் சில்வா

வடமாகாண மக்கள் பொய்ப் பிரசாரங்களுக்கு ஏமாறாது, இனவாதத்தைப் புறந்தள்ளி எமக்கு வாக்களித்தமைக்கு விசேடமாக நன்றி தெரிவிப்பதாக தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இன்றையதினம் (15.11.2024) இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் கருத்து தெரிவித்த அவர், விகிதாசாரத் தேர்தலின் கீழ் தேசிய மக்கள் சக்தி வரலாற்று வெற்றியை பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் அரசியல் நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். வெற்றிக்காகத் தியாகம் செய்தவர்களுக்கு அனைவருக்கும் நன்றிகள்.

விசேடமாக பொய்ப் பிரசாரங்களுக்கு ஏமாறாத வடமாகாண மக்கள்,



இனவாதத்தைப் புறந்தள்ளி எமக்கு வாக்களித்தமைக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் வழங்கிய பெரும்பான்மையான அதிகாரத்தை மக்களின் நன்மைக்காக அர்ப்பணித்து மக்களின் நம்பிக்கையைப் பாதுகாப்போம் எனவும் தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா மேலும் தெரிவித்தார்.

# அநுராவின் கட்சி தமிழர் பகுதிகளைக் கைப்பற்றியது எப்படி? தமிழ் கட்சிகளுக்கு வரலாறு காணாத பின்னடைவு!

இலங்கையில் மத்தியில் ஆட்சி செய்யும் தேசிய கட்சியொன்று தமிழர் பகுதிகளில் அதிகாரத்தைக் கைப்பற்றிய முதலாவது சந்தர்ப்பமாக இந்த நாடாளுமன்றத் தேர்தல் அமைந்துள்ளது.

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் தமிழ் அரசியல் கட்சிகள் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ள தருணமாக இது கருதப்படுகிறது.

குறிப்பாக மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம் தவிர்த்து ஏனைய தமிழர் தேர்தல் மாவட்டங்கள் அனைத்திலும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது.

இதற்கு தமிழ் அரசியல்வாதிகள் மீதான தமிழ் மக்களின் விரக்தியும் அதிருப்தியும் ஒரு முக்கியக் காரணம் என்கிறார் மூத்த பத்திரிகையாளர் ஆர்.சிவராஜா. அதோடு, வடக்கில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஒரு வாரத்திற்கு முன்னர் ஆற்றிய உரை, அங்குள்ள மக்களின் மனங்களில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் தான் கருதுவதாகக் கூறுகிறார் அவர்.



தென்னிலங்கை மக்களைப் போலவே, வட, கிழக்கு தமிழ் மக்களும் மாற்றத்தை விரும்பியுள்ளார்கள் என்பது தெளிவாகிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூட ஐக்கிய மக்கள் சக்திக்குக் கணிசம் ஆன ஆதரவு வடக்கு, கிழக்கு தமிழர் பகுதிகளில் இருந்தாலும், இந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவர்கள் நேரடியாகவே தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்கியுள்ளனர். இது, அவர்கள் மாற்றத்தை விரும்பியதைக் காட்டுகிறது என்று தெரிவித்தார் சிவராஜா.

மேலும், தமிழர் பிரதேசங்களில் தமிழ் அரசியல் கட்சிகள் எல்லா இடங்களிலும் பிரிந்து போட்டியிட்டதால் தமிழ் கூட்டமைப்பு இரண்டாக பிரிந்து, அதிலும் சுயேட்சை குழுக்கள் என பிரிந்து பல கோணங்களில் சென்றன. இதைப் பார்த்து அதிருப்திக்கு ஆளான மக்கள் தங்களுடைய கருத்தைத் தேர்தல் மூலம் வெளிப்படுத்தியுள்ளதாகக் கூறுகிறார் அவர்.

குறிப்பாக வடக்கில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஒரு வாரத்திற்கு முன்னர் ஆற்றிய உரை, அங்குள்ள மக்களின் மனங்களில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க கூடும் எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

நாங்கள் உங்களுக்குரிய தீர்வை பெற்றுக் கொடுப்போம். வடக்கிற்கும், தெற்கிற்கும் வித்தியாசம் இல்லாத தீர்வை தருவோம் என்று ஜனாதிபதி அங்கு ஆற்றிய உரை மக்கள் மனதில் பெரிதாக எடுப்பட்டிருக்கின்றது.''

ஆகையால் ஜனாதிபதி தலைமையிலான கட்சிக்கும் ஒரு சந்தர்ப்பத்தை கொடுக்கலாமே என்று மக்கள் தீர்மானித்துள்ளதாகத் தெரிவதாகக் கூறுகிறார் மூத்த பத்திரிகையாளர் சிவராஜா. மேலும், மலையகத்திலும் இதே நிலைதான் காணப்படுவதாக அவர் தெரிவித்தார். நன்றி:- பிபிசி

# புதிய பாராளுமன்றத்தின் வரலாற்று முக்கியத்துவம்




பாராளுமன்றத் தேர்தலில் இந்த தடவை வாக்களிப்பு வீதம் கணிசமானளவுக்கு குறைந்து விட்டது. இரு மாதங்களுக்கும் குறைவான காலத்துக்குள் இரு தேசிய தேர்தல்களை சந்திப்பதில் அரசியல் கட்சிகளுக்கு மாத்திரமல்ல மக்களுக்கும் ஏற்பட்ட சலிப்பே அதற்கு பிரதான காரணம் எனலாம். ஜனாதிபதித் தேர்தலை விடவும் பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் கூடுதலான அளவுக்கு ஆர்வம் காட்டுவார்கள் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க ஏற்கனவே நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

ஆனால் வாக்களிப்பு வீதம் அவரின் நம்பிக்கைக்கு மாறாகவே அமைந்து விட்டது. இலங்கையில் வாக்காளர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 ஆகும். செப்ரெம்பர் 21 ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 36 இலட்சத்து 19 ஆயிரத்து 916 (79.46 சத வீதம் ). வாக்களிக்காதவர்களின் எண்ணிக்கை 35 இலட்சத்து 20 ஆயிரத்து 438. இது மொத்த வாக்குகளில் ஐந்தில் ஒரு பங்கு ஆகும் .

பாராளுமன்றத் தேர்தலில் நேற்றைய தினம் வாக்களிப்பு 60 65 சதவீதமாக இருந்ததாக வாக்களிப்பு முடிவடைந்த பிறகு தேர்தல் அவதானிகள் கூறினார்கள். இந்த ஆசிரிய தலையங்கம் எழுதப் பட்டுக் கொண்டிருந்த தருணம் வரை வாக்களிப்பு வீதம் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் இருந்து வெளியாகவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காதவர்களையும் விட கூடுதலானவர்கள் நேற்றைய தினம் வாக்களிப்பில் கலந்து கொண்டிருக்கவில்லை என்பது தெரிகிறது. எது எவ்வாறிருந்தாலும், புதிதாக தெரிவு செய்யப்படும் பாராளுமன்றத்துக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் இருக்கிறது. ஜனாதிபதியாக திஸநாயக்க பதவியேற்றதை அடுத்து நாட்டின் ஆட்சியதிகாரம் பாரம்பரியமான அரசியல் அதிகார வர்க்கத்தை பிரதிநிதித்துவபடுத்தி வந்த அரசியல் தலைவர்களிடமிருந்து அந்த வர்க்கத்துக்கு வெளியில் சாதாரண குடும்ப பின்னணியைக் கொண்ட ஓர் அரசியல்வாதியிடம் வந்துசேர்ந்தது.

புதிய அரசியல் கலாசாரத்தையும் முறைமை மாற்றத்தையும் செய்யக் கூடியவராக பெரும்பான்மையான வாக்காளர்களால் அடையாளம் காணப்பட்டு ஆட்சிக்குக் கொண்டு வரப்பட்ட திஸநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் வசதியான பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றி அரசாங்கத்தை அமைக்கப் போகிறது. புதிய பாராளுமன்றம் செப்ரெம்பரில் நடைபெற்ற அதிகார மாற்றத்தை பூர்த்தி செய்வதாக அமைகிறது. அத்துடன் தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே. வி. பி.) சுமார் 60 வருடங்களுக்கு முன்னரான அதன் பிறப்பில் தொடங்கிய அரசியல் அதிகாரத்தை நோக்கிய பயணம் இரு ஆயுதக் கிளர்ச்சிகளின் பயங்கரமான அனுபவங்களைக் கடந்து ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்து இன்று பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றி ஒரு முழு வட்டத்தை பூர்த்தி செய்திருக்கிறது.

இந்த உருநிலை மாற்றம் ஜே. வி. பி. தேசிய மக்கள் சக்திக்கு மாத்திரமல்ல, இலங்கைக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

# மருத்துவர் அர்ச்சுனாவுடன் கௌசல்யாவும் பாராளுமன்றம் செல்கின்றார்!



நடந்து முடிந்த இலங்கையில் 10 ஆவது நாடாளுமன்ற தேர்தலில் சுயேட்சையாக யாழ்மாவட்டத்தில் போட்டியிட்ட மருத்துவர் அருச்சுனா வெற்றி பெற்றுள்ளார். நடைபெற்று முடிவடைந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் வெற்றி பெற்றுள்ளனர்.அத்துடன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் சுயேட்சை குழு 17 சார்பில் ஒரு பாராளுமன்ற உறுப்பினருமாக 6 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் மட்டும் அல்ல யாழ்ப்பாணம் முழுவதும் அள்ளினாலும் ேக்கு இந்த தொகுதியில் கிடைத்த இரண்டாம் இடம் அதிர்ச்சி கொடுக்க கூடியது. அதேவேளை முதன்மை வேட்பாளர் உள்ளிட்ட 3 வேட்பாளர்கள் கொண்ட தொகுதியில் ஒரு சுயேட்சைக்குழு முதன்மை பெற்று 24 வருடங்களுக்கு பிறகு சுயேட்சை பாராளுமன்ற உறுப்பினராக மருத்துவர் அர்ர்சுனா செல்ல வுள்ளதுடன் அவரது கட்சியில் போட்டியிட்ட கௌசல்யாவும் நாடாளுமன்றம் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க சுமந்திரன் என்னும் யதார்த்தவாதி போய்ச் சேர்ந்த இடம் தவறானது என்பது என்னுடைய நீண்டகால எண்ணம். அவரின் எண்ணங்களை புரிந்து கொள்ளும் திறன் அவர் சார்ந்த கட்சியினருக்கு இல்லை. அந்த கட்சியை பொறுத்தவரை மக்களின் உணர்ச்சியை தூண்டி விட்டு வாக்கெடுக்கும் அரசியல்வாதிகளுக்கே பொருத்தமானது. அவரின் வெற்றிடத்தை அவர்கள் விரைவில் உணர்வார்கள். கிடைத்திருக்கும் தேசிய பட்டியலை சுமத்திரனுக்கு கொடுக்கலாம். பெரும்பான்மை பெற்றிருக் கும் NPP யினரிடம் லொஜிக்கலாக மோதக்கூடிய திறமையாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கும் வீடு சைக்கிள் சங்கு உறுப்பினர்களில் எவரும் இல்லை. அதனால் சுமத்திரன் பாராளுமன்றம் சென்றால் நன்றாக இருக்கும் எனவும் ஒருவர் தனது ஆதங்களைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


ஈழமுரசு
ஈழமுரசும்
கனடா வாழ் தமிழ் மக்களும்
பெருமையுடன் கொண்டாடும்
தமிழீழத் தேசிய தலைவர்
மேதகு வே. பிரபாகரன்
அவர்களின்
70
தலைவர்
பிறந்தநாள்
அதுவே
தமிழர்
நிமிர்ந்த நாள் !
வீழ்ந்து விடாத
வீரம்
மண்டியிடாத
மானம்
இருப்பாய்
தமிழா
நெருப்பாய் !
AAROSAI
"WHERE MUSIC BEGINS..."
அகவை விழா
மாபெரும் எழுச்சி விழா
2024
நவம்பர்
26
செவ்வாய்க்கிழமை
மாலை
5 மணி
TORONTO
METROPOLITAN CENTRE
3840 Finch Ave East
Scarborough, ON, M1T 3T4
(Kennedy & Finch)
MONTREAL
LE CHATEAU ROYAL
3500 Bd du Souvenir
Laval, Montreal, QC,
H7V 1X2, (514) 660-5891
ஈழமுரசின் விசேட இணைப்பில் தேசியத்தலைவருக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்பின் தொடர்புகொள்ளவும்
தொடர்புக்கு: 289-277-5920